THE MADRAS LEGISLATIVE COUNCIL.

Saturday, the 9th March 1933

The House met in the Council Chamber, Fort St. George at three of the clock, Mr. Chairman (THE HON. DR. P. V. CHERIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Educational Conference

* 55 *Q.*—VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a copy of the resolutions passed at the 52nd Madras State Educational Conference held on 17th May 1962 was received by the Government; and

(*b*) if so, the action taken or proposed to be taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) ஆம். (இ) விஷயம் பரிசிலனையில் இருக்கிறது.

Government Erskine Hospital, Madurai

* 56 *Q.*—DR. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that one Porchezian of Srivilliputhur, a D.M.K. prisoner, died in the Government Erskine Hospital, Madurai on 23rd August 1962; and

(*b*) if so, under what circumstances?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Porchezian, a remand prisoner who was released on bail on the forenoon of 23rd August 1962 died on the same night in the Erskine Hospital, Madurai.

(*b*) He died of enteric with haemorrhage.

Employees' State Insurance Scheme

57 *Q.*—DR. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that a Committee went into the working of the Employees' State Insurance Scheme for workers at Coimbatore;

(*b*) if so, whether any report has been submitted; and

(*c*) the action taken or proposed to be taken thereon?

[9th March 1963

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) It has been reported that a study group organized by the South India Textile Research Association, Coimbatore went into the working of the Employees' State Insurance Scheme.

(b) No report has been submitted by the study group to the Government. The Government have, however, obtained a copy of the report prepared by it.

(c) The Government have examined the report in consultation with the Director of Medical Services, Regional Director, Employees' State Insurance Corporation and the Commissioner of Labour, Madras. The recommendations of the study group are already being implemented wherever practicable.

Rice Mills

* 58 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal before the Government to buy or take over the rice mills in Thanjavur district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. எம். சுப்பையா செட்டியார் : தஞ்சாவூரில் நெல் நிறைய இருந்தும் அங்கு இருக்கிற மில்கள் ஓடாமல் இருப்பதற்கான காரணங்களை விசாரித்து அவற்றை ஓட்டுவதற்கு வழி செய்யப்படுமா ?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சொந்த மில்காரர்கள்தான் வைத்திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் பொறுப்பில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : அதைத்தான் அரசாங்கம் விசாரித்து ஓட்டுவதற்கு வழி செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அதைப்பற்றிக் குறிப்பாகச் சொன்னால், அரசாங்கத்தால் என்ன செய்யமுடியுமென்பது யோசிக்கப்படும்.

Population of Fishermen

* 59 Q.—VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any statistics regarding populations of fishermen in the State, districtwise has been prepared and maintained by the Fisheries Department; and

9th March 1963]

(b) if so, to place a copy[a] on the table of the House?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள மீனவர்கள் ஜனத்தொகை 1957-58-ல் எடுக்கப்பட்டது. மாவட்ட வாரியாக அவர்களுடைய ஜனத்தொகை 1957-58-ம் ஆண்டிற்கான மீன்வளத் துறை நிர்வாக அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தது. 1957-58-ல் இம் மாநிலத்தில் இருந்த மீனவர்கள் ஜனத்தொகையைக் காட்டும் ஓர் அறிக்கை [a] சட்ட சபையில் வைக்கப்பட்டுள்ளது.

* வித்வான் டி. முத்துக்கண்ணப்பன்: ஐயா, மொத்தத்தில் 2 லட்சத்து 77 ஆயிரம் மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இந்து மதத்தவர் எத்தனை பேர், மற்றவர்கள் எத்தனை பேர் என்று சொல்லமுடியுமா?

கனம் திரு. என். நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: தனி யாகக் கேள்வி கேட்டால் சொல்லமுடியும்.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்: சார், மீனவர்கள் என்று எப்படிக் கணக்கு எடுக்கப்படுகிறது?

கனம் திரு. என். நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: மீன் பிடிக்கக்கூடிய தொழிலைச் சார்ந்தவர்கள் மீனவர்கள் என்று கணக்கெடுக்கப்படுகிறது.

திரு. எம். சுப்பையா செட்டியார்: மீன் வகையில் ஏதாவது இப்படி வித்தியாசம் இருக்கிறதா?

கனம் திரு. என். நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: பல வகை மீன்கள் இருக்கின்றன.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note*.—An asterisk (*)at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS.

(1) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

MR. CHAIRMAN: I have to inform the House that the following candidates have been validly nominated for election of nine members to the Committee of Privileges for the financial year 1963–64 :—

1. Dr. A. Lakshmanaswami Mudaliar.
2. The Hon. Sri R. Venkataraman.
3. Sri K. Rajaram.
4. Srimathi Mary C. Clubwala Jadhav.
5. Sri S. T. Adityan.
6. Sri A. Chidambara Mudaliar.
7. Sri T. Joghee Gowder.
8. Dr. A. Chidambaranathan.
9. Sri A. K. Thangavel Mudaliar.

[a] Printed as Appendix on page 458.

[Mr. Chairman] [9th March 1963

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, nine, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Chairman is ex-officio a member.

Under rule 156 (4) of the Council Rules, I have nominated Dr. A. Lakshmanaswami Mudaliar to be the Chairman of the Committee.

(2) ELECTION ~~OF MEMBERS~~ TO THE HOUSE COMMITTEE.

MR. CHAIRMAN : I have also to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1963–64 :—

1. Sri K. Ramadass.
2. Sri J. Ponnusamy Villavarayar.
3. Sri R. Venkatachalam.
4. Sri M. Rajah Iyer.
5. Sri V. M. Surendra Ram.
6 Srimathi Saraswathi Pandurangam.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under Rule 173 (1) of the Council Rules, I nominate the following two members to be the members of the said Committee :—

1. Sri K. Rajaram.
2. Sri S. K. Sambandhan.

The Deputy Chairman of the Council shall be ex-officio the Chairman of the Committee.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1963–64—*cont.*

MR. CHAIRMAN : We will now continue the discussion on the Budget for the year 1963–64. I fix a time-limit of ten minutes for each hon. Member.

* திரு. எம். சுப்பையா செட்டியார்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1963-64 வருஷத்திய சென்னை சர்க்கார் பட்ஜெட் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல தங்கள் அனுமதியைக் கோர விரும்புகிறேன். இந்த நடப்பு வருஷத்தில் கிட்டத்தட்ட 125 கோடி ரூபாய் வருவாய் என்றும் 127 கோடி செலவு என்றும் காணப்பட்டது. 274 லட்சம் ரூபாய் துண்டுவிழுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டில் பதுவரிகள் இல்லையென்ற பாவனையில் நமக்கு இந்த நிதிநிலையைத் தெரிவித்திருக்கிறார்கள். சமீபத்தில்தான் நிலத்திற்குத் தீர்வையும்

9th March 1963] *[திரு. எம். சுப்பையா செட்டியார்]*

சாகுபடி செய்யும்படியான நிலத்திற்குத் தண்ணீர் வரியும் நகர்ப் புறங்களிலுள்ள நிலங்களுக்கு வரிபோடும் சட்டமும் கொண்டு வந்தார்கள். நிதி அறிக்கையில் ஆடம்பரப் பொருள்களில் எல்லா மாநிலங்களையுமொட்டி வரி கூடுதல் செய்யப்போகிறோம் என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். இவையெல்லாம் புதுவரி கள் என்று சொல்லாமல் பழைய வரிகள் என்று நாம் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? நிதி அறிக்கையிலேயே இந்த புதிய வரிகள் மூலமாகக் கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் நாங்கள் அதிக மாக எதிர்பார்க்கிறோம் என்று 32-வது பக்கத்தில் சொல்லியிருக் கிறார்கள். இது புதுவரியின் மூலமாக வருவாய் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தின் வருவாய் உயருவதற்காக சென்ட்ரல் சேல்ஸ் டாக்சை ஒரு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதம் உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் மாநிலத்தி லுள்ள மக்கள் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். இதைத் தவிர, மத்திய அரசாங்கத்தின் சமீபத்தில் வெளியான பட்ஜெட்டில் நேர்முக வரிகளும் மறைமுக வரிகளும் அளவுக்கு மிஞ்சி போட்டிருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கையில் மக்களை எவ்வளவு பாதிக்கும் என்பதை ஆராய்ந்து வரிகளை உயர்த்தியிருக்கிறார்களா என்பதை நாம் பலமுறை சிந்திக்க வேண்டியிருக்கிறது. எக்சைஸ் வரி 1956-57-ல் 200 கோடி இருந் ததை 700 கோடியாக உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய அரசாங்க நிதி 1,600 கோடிக்கு வரிபோடும் வகையில் உயர்த்தியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது மத்திய அரசாங்கம் ஒன்று, மாநில அரசாங்கம் ஒன்று, ஸ்தல ஸ்தாபனம் ஒன்று இந்த மூன்றும் சேர்ந்து மக்களை எவ்வளவு பிழிந்து எடுக்கிறது. மக்க ளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதை நாம் மறக்க முடியாது.

அடுத்தபடியாக, இந்த மாதிரி வரிகளை வருஷா வருஷம் அதிகப் படுத்திக்கொண்டே போனால், மக்களுடைய வாழ்க்கை நிலை என்ன ஆவது? மூன்று வழிகளிலும் போடும் வரியைக் கூட்டிப்பார்த் தால், மக்களுக்கு மிஞ்சக்கூடியது எவ்வளவு? அதை வைத்துக் கொண்டு மத்திய தர வகுப்பினர் எப்படி ஜீவனம் செய்வது என்பதை அரசாங்கம் சிந்தித்துப்பார்த்து எதைக் குறைக்க வேண்டுமோ அதைக் குறைக்க வேண்டுமென்று சொல்ல ஆசைப் படுகிறேன். மக்கள் வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி வசூலிக்கும் வரிப்பணத்தையாவது அரசாங்கம் நல்லமுறையில் செலவு செய் தால் நமக்கு ஆறுதல் ஏற்படலாம். நாம் அன்றாட பேப்பரில் பார்க்கிறோம். ஆடிட் ரிப்போர்ட்டில் பார்க்கிறோம். மூன்று அங்கங்கள் போட்டிபோட்டுக்கொண்டு வரி வசூலிப்பதைப் போலவே பல இனங்களில் செலவிடுகிறார்கள். அரசாங்கம் இதைச் சிக்கனப்படுத்தவேண்டும். இன்றுவந்த மெயில் பேப்ப ரில் மத்திய அரசாங்க மந்திரிகளுக்கு ஏற்படக்கூடிய செலவினங் களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் எல்லோரும் சிக்கனமாக வாழ்ந்து இந்த அவசர காலத்தில் அரசாங்கத்திற்கு

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [9th March 1963

உதவவேண்டுமென்று மந்திரிகளும் அரசாங்கமும் எதிர் பார்க்கின்ருர்கள். ஆனல் அந்த மெயில் பேப்பரில் மத்திய அரசாங்க மந்திரிகளுக்கு மட்டும் அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய மின் சாரம், தண்ணீர் முதலியன மட்டும் 1,60,000 ரூபாய் வருஷத்திற்குச் செலவாவதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு சப்ளை செய்யப்படும் ஃபர்னிச்சர் முதலியனவற்றிற்கு 13 லட்சம் சொச்சம் செலவாவதைக் கணக்கிட்டிருக்கிருர்கள். மக்களிடமிருந்து சிக்கனத்தின் மூலமும் செலவைக் குறைப்பதன் மூலமும் அரசாங்கத்திற்கு அதிக வருவாய் இருக்கவேண்டுமென்று எதிர் பார்க்கும்போது, அதற்கு வழிகாட்டவேண்டியது அரசாங்கமும் மந்திரிகளும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3–10 p.m. விற்பனை வரித் திட்டத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விற்பனை வரிச்சட்டமானது அமுல் படுத்தும் போது நீதிக்கும் நேர்மைக்கும் முரணுக இருக்கிறது. ஒவ்வொரு விற்பனை வரி அதிகாரியும் அதிலுள்ள ரூல்களைத் தங்களுக்கே விளங்காத வகையில் வியாக்யானம் செய்து உண்மையான கணக்கு வைத்திருக்கிறவர்களுக்கு இம்சை தருகிருர்கள். அப்பீல் செய்து இதைத் தடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அரசாங்கத்திற்கு பலமுறை இதை எடுத்துச் சொல்லியிருக்கிருேம். அரசாங்கமும் ஒரே பிடிவாதமாக காமதேனுபோன்ற விற்பனை வரிகொடுக்கும் மக்களுக்கு ஒருவித நன்மையும் செய்ததாகத் தெரியவில்லை. விற்பனை வரியில் விவசாயிகள் விற்கும் சரக்குகளுக்கு வரி இல்லையென்று சொல்கிருர்கள். ஆனல் அந்தச் சரக்குகளை ஏற்றிவரும் லாரிகளை வழிமறித்து யாரிடமிருந்து சரக்கு வருகிறது, யாருக்குப்போகிறது என்று தெரிந்துகொள்ளாமல் லாரி வவுச்சர்களைக் கேட்டுப்பெற்று அதற்கு வரிபோட்டு வசூலிக்கிற நிலைமையில் இருக்கிறது. அதைக் கவனித்து அவ்வாறு நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ட்ரல் சேல்ஸ் டாக்சுக்கு 'சி' பாரம் கொடுத்தால் 1 சதவிகிதம் இல்லாவிட்டால் 7 சதவிகிதம் என்று வைத்திருக்கிருர்கள். எல்லோரும் வியாபாரிகள். அவர்களில் அனேகர் படிக்காதவர்கள் இருக்கிருர்கள். இந்த 'சி' பாரம் பூர்த்தி செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதிகாரிகளுக்கே சரியாக விளங்காத வகையில் தினம் தினம் புதுப்புது ரூல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களே தினம் ஒவ்வொரு அர்த்தம் செய்யும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 7 சதவிகிதம் வரியைப் போட்டு அரசாங்கம் வியாபாரிகளிடமிருந்து வசூல் செய்வது நியாயமில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வியாபாரி கூடுதலாக விற்ருல் கொள்ளை லாபம் அடிக்கிருர்கள் என்று சொல்கிருேம். ஒரு சதவிகிதத்திற்கு பதில் 7 சதவிகிதம் அரசாங்கம் வசூலிப்பதை என்ன பெயரிட்டு அழைப்பது என்று சொல்லத் தேவையில்லை. அதைத் தவிர அளவுக்கு மிஞ்சிய வரி போட்டு வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் விலையை ஏறச்செய்வது நியாயமில்லை. ஏழைகள் முதல்

9th March 1963] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

பணக்காரர்கள் வரை உபயோகிக்கும் கிரசின் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு பாட்டில் கம்பெனியின் விலை 8 முதல் 9 நயா பைசாதான். இன்று அது விற்கக்கூடிய விலை 35 முதல் 37 நயா பைசா, வரியை 300 முதல் 350 சதவிகிதம் விதிப்பதை அரசாங்கம் சிந்தித்துப்பார்த்து, ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இல்லாது உபயோகிக்கும் பொருள்களின் விலையைக் குறைக்க வழிசெய்யவேண்டும். மத்திய நிதியமைச்சர் அவர்கள் சிமிழி எண்ணெய் ஜாஸ்தி உபயோகிக்காமல் அதற்குப் பதில் தாவர எண்ணெயை உபயோகிக்கவேண்டுமென்று சொன்னார்கள். தாவர எண்ணெய் விலை சகாயமாக இருந்தால், கண்டிப்பாக அதை உபயோகப்படுத்தவேண்டியதுதான். கிரசினுக்கு மேல் 4 பங்கு விலையில் தாவர எண்ணெய் விற்கிறது. சிமிழி எண்ணெய்க்கே வழியில்லாத மக்கள் 1-க்கு 4 பங்கு கொடுத்து வாங்கி அதை எப்படி உபயோகிக்க முடியும்? உணவுக்காக உபயோகிக்கும் பொருள்களை விளக்கெரிக்க உபயோகிக்கவேண்டுமென்று மத்திய நிதியமைச்சர் சொல்கிறார். சென்ற வருஷம் ஏழைகள் உபயோகிக்கும் மஞ்சள் சிமிழியெண்ணெய்க்கு வரிபோடவில்லை. வெள்ளை எண்ணெய்க்குத்தான் வரி போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இங்குள்ள கனம் அங்கத்தினர் எல்லோருக்கும் தெரியும். நாமும் எல்லோரும் வெள்ளை எண்ணெயைத்தான் உபயோகிக்கிறோமே தவிர மஞ்சள் எண்ணெயை உபயோகிப்பதில்லை. இதைத் தெரிந்துகொள்ள மத்திய அமைச்சருக்குப் பல காலம் ஆயிற்று. இப்போதுள்ள சிரமத்தை எடுத்துச் சொன்னால் சிமிழி எண்ணெயை விட 1-க்கு 4 பங்கு கொடுத்து தாவர எண்ணெயாகிய கடலை எண்ணெய், தேங்காயெண்ணெய் போன்ற எண்ணெய்களை வாங்கி விளக்கு எரிக்கச் சொல்கிறார். மந்திரி என்ன நிதானத்தில் சொன்னார் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக, இந்த மாதிரி வரிகளைப் போட்டு மக்கள் வாங்கமுடியாத அளவுக்குச் சாமான்களின் விலை ஒரு புறம் ஏறிக்கொண்டே இருப்பதுடன் இல்லாமல், அதிகாரிகளும் நிறைய வரியை வசூலிக்க இடமிருப்பதால், இதன் விளைவாக இலஞ்சம் முதலிய ஊழல்கள் ஏற்பட வசதி ஏற்படுகிறது. இதை உணர்ந்து அரசாங்கம் வரியைக் குறைத்து மக்களுக்கு அனுகூலம் செய்ய வேண்டும். இந்த வருஷம் கிட்டத் தட்ட ரூபாய்க்கு 25 நயா பைசா வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். நமக்கு வேண்டும் என்கிற சாமான்களை வாங்கும்போது, இதைக் கண்டிப்பாக உணருவோம்.

அடுத்தபடியாக, தங்கக் கட்டுப்பாடு பற்றி மற்ற அங்கத்தினர்கள் எல்லோரும் நிறையப் பேசி இருக்கிறார்கள். எனவே நான் ஒரு சில வார்த்தை மட்டும் கூற ஆசைப்படுகிறேன். தங்க நகைகளை ஆடம்பரத்திற்காக மட்டும் யாரும் அணிவதில்லை. ஆபத்திற்கு உதவ வேண்டும் என்ற காரணத்தினால்தான் அதை அணிகிறார்கள். அதற்குக்கூட இன்று ஆபத்து வந்து விட்டது. அதை

நம்பி வாழ்ந்த லட்சக்கணக்கான மக்கள் வேலே இழந்து நடுத் தெருவில் நின்று என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிருர்கள். அரசாங்கம் அவர்களுக்கு நல்ல காரியம் ஒன்றும் செய்யவில்லே. அவர்களுக்குத் திரும்பவும் தங்கம் கிடைக்க வழி செய்வதைத் தவிர வேறு நல்ல வழி எதுவும் இருப்பதாகச் சொல்ல முடியாது. இந்த விதமாக அரசாங்கம் மக்களுடைய உரிமைகளே யும் உடமைகளேயும் பறிக்கும் சட்டம் போட்டால் மக்கள் எந்த வகையில் இந்த நாட்டில் வாழ முடியும்? இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதைத் தவிர்த்து விவசாயத்துறையில் ஒரு வார்த்தை. விவசாயிகளுக்கும் நம் விவசாய இலாகா இருக்கிறதே, இந்த இரண்டு பேருக்கும் தொடர்பே இல்லே. விவசாய இலாகாவினுல் பல காரியங்கள் நடக்கின்றன.

கனம் திரு. பி. கக்கன்: கனம் அங்கத்தினர் விவசாயிகளுக்கும் விவசாய இலாகாவுக்கும் சம்பந்தமில்லே என்று கூறி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிருர்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நான் ஒன்றும் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயலவில்லே. நிச்சயம் மறைக்க முடியாதென்றும் தெரியும். மந்திரி அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, எந்த விவசாயியையாவது கூப்பிட்டு, இந்த விவசாய இலாகாவினுல் தனக்கு நேரடியான பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்க வேண்டும். அப்போது மந்திரி அவர்களே இதை உணர முடியும். விவசாய இலாக்காவினுல் பயிரிடப்படும் நிலங்களுக்கு மட்டும் போனுல் போதாது. நேரடியாக கிராமங்களுக்குப்போய் பார்த்தால் இது புரியும்.

கனம் திரு. பி. கக்கன்: கனம் சேர்மென் அவர்களே, நான் ஒரு விவசாயியின் மகன். எனக்கு நன்கு உழத் தெரியும். கனம் அங்கத்தினருக்கு உழத்தெரியுமோ என்னவோ தெரியாது. எனக்கு விவசாயத்தில் அனுபவம் இல்லே என்று சொல்வதற்காக வருந்துகிறேன். நான் நல்ல அனுபவம் வாய்ந்தவன் விவசாயத்தில்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நான் மந்திரி அவர்களே மறுபடியும் மறுத்துச் சொல்ல விரும்பவில்லே. நானும் விவசாயக் குடும்பத்திலிருந்து தான் வந்திருக்கிறேன். நாங்களும் விவசாயம் தான் செய்கிருேம். இந்த நாட்டில் முக்கால்வாசிப் பேர் விவசாயத்தை நம்பி வாழ்கிருர்கள். நான் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றுதான் சொல்லுகிறேனே தவிர, மந்திரி அவர்கள் ஆத்திரப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். 1962-ல் தஞ்சாவூரில் மகசூல் குறைந்திருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். இந்த நிலேமையில் சென்ற வருஷம் குருவை சாகுபடி விடாத மழை அடாத மழை பெய்து நெல்லும்

9th March 1963] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

கெட்டுப் போய் மக்களுக்குக் கிடைக்கவில்லை. அடுத்து சம்பா மகசூலில் பிந்திய நடவு காரணமாகவும், காலாகாலத்தில் மழை இல்லாத காரணத்தாலும், 30 முதல் 40 சதவிகிதம் வரை மகசூல் குறைந்து மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நெல்லில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதைப் பல இடங்களிலும் சொல்லியிருக்கிறார்கள். Indian Express நிருபர் தஞ்சை ஜில்லாவில் கிராமங்கள் பூராவுமாகச் சென்று இதைப்பற்றி எழுதி இருக்கிறார். ஆனால் அரசாங்கம் திரும்பத் திரும்ப மறுத்து வருகிறது. இதிலிருந்தே அரசாங்கத்திற்கு மக்களிடம் இருக்கும் தொடர்பை ஒரு வழியாக உணரலாம்.

மேலும் இப்போது நமது கூட்டுறவு மந்திரி அவர்கள் நெல் ஆலைகளைப் பற்றிச் சொன்னார். தஞ்சை ஜில்லாவில் உள்ள நெல் மில்கள் அநேகமாய் எல்லாம் மூடிக்கிடக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் உள்ள நெல்லை மற்ற மாநிலக்காரர்கள் வாங்கிக் கொண்டு போய் அங்கே அதை அறைத்து குறைந்த விலையில் விற்க வழி ஏற்படுகிறது. தஞ்சாவூரில் அறைத்தால் இவர்களுக்கு வாகன்கள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. பாக்கி இருக்கிற அரிசியையும் வாகனில் ஏற்றிக் கொண்டு போனால், அரிசி கெட்டுப் போய் விடும். ஆகையால் அந்த ஜில்லாவில் உள்ள நெல் மில்கள் வேலையில்லாமல் இருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் இந்த வருஷத்தில் நமது அரசாங்கம் 100-க்கு 10 சதவிகிதம் அரிசி கட்டாயம் கொடுக்கவேண்டும் என்கிறார்கள்—இந்த விஷயத்தில் சட்டமில்லை என்று சொல்கிறார்கள்—இந்தக் காரணத்தைக் காட்டி 10 சதவிகிதம் நெல் எடுக்கும்போது இன்று எவ்வளவுதான் நெல் விலை குறைந்து விற்றாலும் அரசாங்கக் கொள்முதல் அதைவிட 2 ரூபாய் குறைந்தே இருக்கிறது. ஆகவே மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் தஞ்சை ஜில்லாவில் வந்து இங்குள்ள நெல்லை வாங்கிக் கொண்டு போய் தொந்திரவு இல்லாமல் கூடுதல் விலைக்கு விற்க வசதி ஏற்படுகிறது. இங்கே இருப்பவர்கள் 10 சதவிகிதம் போக மீதி இருக்கிற 90 சதவிகிதத்தில் அதையும் சேர்த்து விலையை ஏற்றி விற்க வேண்டியிருக்கிறது. இதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் சொல்வது புரியவில்லை. கட்டுப்பாடு ஒன்றுமில்லை. எப்படி விவசாயிகளுக்கு விலை குறைகிறது என்று சொல்லுங்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நெல் மூட்டை 15 முதல் 16 ரூபாய்க்கு விற்கிறது. தஞ்சாவூரில் இதை வாங்கிக்கொண்டு போய்—கிட்டத்தட்ட கேரளத்தார்கள்தான் இதை வாங்கி அனுப்புகிறார்கள். அங்கேதான் நமக்கு மார்கட். இப்போது நமது மாநிலத்தில் அறைக்கும் மில்களிலிருந்து 100-க்கு 10 பங்கு குறைந்த விலையில் அதாவது கொள்முதல் விலையைவிட 2 ரூபாய் குறைத்து அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதை பாக்கியுள்ள 90 சதவிகிதத்தில் உள்ள அரிசியில் ஏற்றித் தானே விற்கமுடியும். பாலக்காடு, திருச்சூர் முதலிய அடுத்த

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [9th March 1963

மாநில மில்காரார்கள் இதை அதே விலைக்கு வாங்கிக் கொண்டுபோய் அறைத்து விற்கும்போது அவர்களுக்கு இந்த விதமான கட்டுப் பாடு இல்லாமல், குறைத்து விற்கும் சந்தர்ப்பம் இல்லாததால் அவர்கள் குறைந்த விலையிலேயே விற்கும் நிலைமை ஏற்படுகிறது. இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குக் கேரளாவில் உள்ள மில் காரர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு விற்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டுமல்ல, திருச்சி கோயம்பத்தூர் முதலிய ஜில்லாக்களில் உள்ள மில்களும் பாதிக் கப்பட்டு ஓடாமல் இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : The hon. Member's time is up.

3-20 p.m. திரு. எம். சுப்பையா செட்டியார் : Two more minutes, Sir. 2 நிமிஷத்தில் முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The hon. Member has already taken fifteen minutes, while he was given only ten minutes.

திரு. எம். சுப்பையா செட்டியார் : இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். சுகாதாரத்தைப் பற்றி ஒரு சில வார்த்தை கள் சொல்ல ஆசைப்படுகிறேன். நமக்கு சுதந்திரம் வந்து 15, 16 ஆண்டுகளாகிவிட்டன. இருந்தாலும் எல்லா முக்கிய நகரங் களிலும் பெரிய பஞ்சாயத்து கிராமங்களிலும் இருக்கக்கூடிய சாக்கடைத் தண்ணீர் இவைகளை ஆறுகளிலும் குளங்களிலும்தான் இன்றும் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தி வேறு வழி செய்யும் முயற்சியில் எந்தக் காரியமும் செய்வ தாகத் தெரியவில்லை. இதை குடிதண்ணீருக்கு உபயோகப்படுத் தும் ஆறுகளில் கொண்டுபோய் விடுவது எவ்வளவு ஆபத்து என்று உணர்ந்து இதைத் தடுப்பதற்கான திட்டத்தை உருவாக்க வேண் டும். எப்படியாவது குடிக்கிற தண்ணீர் உள்ள ஆறுகளில் இதைக் கொண்டுபோய் விடாமல் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமீபத்தில் அம்மை நோய் நமது மாநிலத்தில் அதிகமாக இருப் பதைப் பார்க்கிறோம். தடுப்பு ஊசி போடுவதில் என்ன கோளாறோ. எனக்கு ஒன்றும் வைத்தியம் தெரியாது. நான் ஒன்றும் வைத்தியன் அல்ல. இருந்தாலும் தடுப்பு ஊசி போட்டுக் கொண்டவர்களில் பல வித இம்சைகள் ஏற்பட்டு அதனால் இறந்து போகக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது என்று கேள்விப்படு கிறேன். அது உண்மையானால் அந்த மருந்து போடுகிற முறை களில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. வி. ராமையா : அம்மை நோய்க்கா ஊசிபோடு கிறார்கள் ?

திரு. எம். சுப்பையா செட்டியார் : குத்தினால் அது ஊசிதானே. எங்கள் பக்கம் இதையும் ஊசி போடுவது என்றே சொல்லுகிறோம்.

9th March 1963] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

அடுத்து, இந்த Defence fund' collection விஷயமாக நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சமீபத்தில் R.C.A., 11-832/63, dated 15-1-63–ல் வெளியான circular -ல் உள்ள சில முக்கிய வாசகத்தைமட்டும் இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

R.C.A. 11–832/63, dated the 15th January 1963, of Collector . . . . Circular regarding National Defence Fund—Collections from ryots on acreage basis—Instructions issued

'During the conference of the Revenue Officers held on 3rd January 1963 it was observed that contributions for the National Defence Fund might be raised from the ryots in the district with reference to the land owned by them. . .

(1) Wet lands Rs. 3 to 10 per acre according to the productivity of the land and the irrigation facilities.

(2) Dry lands Rs. 0.50 to Re. 1 per acre.

(3) Second Crop: One bag of paddy per acre or its equivalent money value in respect of permitted area announced at the Ryots' Conference and two bags of paddy per acre or its equivalent money value in respect of lands for which permission is subsequently granted as exceptional cases (N.B. T. J. Lands should be reckoned as wet lands for this purpose).

The extent on which commercial crops like plantains, turmeric, limes, etc., are raised may be treated on a separate footing in regard to the levy of contributions. A flat rate of Rs. 15 per acre may be collected on such lands . . . . . .

The Village Munsif may be made responsible for the collection of contributions as fixed in the lists handed over to them. . .

If any of the donors insist on the issue of official receipts for the amounts contributed a list of such donors with amounts paid by them should be sent to the Tahsildar or the Revenue Divisional Officer for the issue of receipts . . . .

Recalcitrant ryots who do not pay contributions at the request of the village officers should be tackled by the supervising officers during their visits and if they are not amenable they should be told firmly that they failed the Government in the hour of need. Where ryots do not respond adequately even after the persuasion of the Tahsildar, such cases may be tackled by the Revenue Divisional Officer. In villages where the President of Panchayat Samithi would influence, their help should also be taken in securing good contributions. If the Revenue Divisional Officer also fails in his attempt he may furnish the names of such ryots to the Collector with full address . . . . .

They are once again informed that the target fixed for the Division should be achieved before the end of January 1963 . . .

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [9th March 1963

இதை நான் குறை கூறுவதாக இல்லை. National Defence -க்கு விரோதமாகப் பேசுவது என்ற எண்ணமில்லை. இந்த மாதிரி ஒரு வற்புறுத்தல் ஏற்படுகிறது என்று தெரிவிப்பதாகச் சொன்னேன். இன்னும் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

திரு. வி. ராமையா : எந்தப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறது ?

திரு. கே. ராஜாராம் : நம் நாட்டில் பஞ்சாயத்து சமிதி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எம். சுப்பையா செட்டியார் : R.C.A. 11832/63 dated 15th January 1963 by Collector.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த கலெக்டர் ?

திரு. எம். சுப்பையா செட்டியார் : அதை சொல்லத் தயாராக இருக்கிறேன். Most probably it may be from North Arcot.

AN HON. Member : ' Most probably '. என்று சொல்லக் கூடாது.

திரு. எம். சுப்பையா செட்டியார் : நம் State- க்குள் தான் இருக்கிறது.

It is a printed matter and it is also circulated. I am prepared to hand over the weekly to the Hon. Minister with the permission of the Hon. Chairman (The hon. Member handed over the weekly to the Hon. Minister).

MR. CHAIRMAN : The hon. Member has already very much exceeded the time-limit?

SRI M. SUBBIAH CHETTIAR : One more minute, Sir.

தலைவர் அவர்களே, இதையொட்டி ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு அமர ஆசைப்படுகிறேன். இப்பொழுது எங்களைப் போன்ற வியாபாரிகள், இன்னும் அரசாங்கத்தினுடைய தொடர்பு உள்ளவர்களும் இந்த அரசாங்கம் இப்பொழுது வசூல் செய்யக் கூடியதை நாங்கள் கேட்டபொழுதெல்லாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதை மனம் நோகாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் அந்தெந்த டிபார்மெண்ட்காரர்களும் போட்டி போட்டுக்கொண்டு நீங்கள் அந்த டிபார்ட்மெண்ட்காரர்களுக்கு பணம் கொடுத்திருக்கிறீர்களே, எங்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது என்று வற்புறுத்திக் கேட்கிறார்கள். இதை வசூல் பண்ணக்கூடாது என்று சொல்லவேயில்லை. கண்டிப்பாக வசூல் பண்ணவேண்டியதுதான். பணம் மட்டுமல்ல, உடல், பொருள், ஆவி அத்தனையும் கொடுக்க வேண்டியதுதான் எங்கள் கடமை. ஆனால் இதில் போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் இருப்பதால்—ஒரு ஜில்லாவை எடுத்துக் கொண்டால் விற்பனை வரி அதிகாரி, சுகாதார அதிகாரி, அடுத்தாற் போல் முனிசிபாலிடி, இன்னும் ரெவின்யூ அதிகாரிகள், ஒவ்வொரு

9th March 1963] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

அதிகாரியும் போட்டிபோட்டுக்கொண்டு—நீங்கள் அந்த டிபார்ட் மெண்ட்காரர்களுக்குக் கொடுத்தீர்களே, எங்களுக்கு ஏன் கொடுக் கக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் தயவை நாடக்கூடியவர்கள் வேறு வழியில்லாமல் எல்லோருக்கும் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த அடிப்படையில் சொல்லுகிறேன். இந்த வசூல் ஆட்சேபகரமில்லை. ஆனால் இந்த வற்புறுத்தல் வேண்டாம் என்று சொல்லி, தலைவர் அவர்களுக்கு மனமார நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The hon. Member Sri S. T. Adityan will now speak. I request him to stick to the time-limit of the minutes.

திரு. எஸ். டி. ஆதித்யன்: தலைவர் அவர்களே, பொதுவாக எதிர்க் கட்சித்தலைவர் பேசியதற்குப் பின்னால் மற்றவர்கள் பேசு வது வழக்கமில்லை. நேற்று ஒரு ஏற்பாட்டின்படி தலைவர் அவர் கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது சௌகரியத்தை உத்தேசித்துச் செய்தார்கள். வேறு சிலர் அதன் பின்னால் பேசி னார்கள் என்ற நிலைமைப்படி எனக்கு இந்த சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

MR. CHAIRMAN : It has never been a rigid practice here for the hon. the Leader of the Opposition to speak last. We give him the privilege to choose the day and time.

திரு. எஸ். டி. ஆதித்யன்: அவர்கள் பேசின வார்த்தைகளுக் குப் பிறகு பேசுவது, புதிதாக வியாக்கியானம் சொல்லுவது பொருத்தமில்லாத விஷயம். ஆகையினால் ஏதோ விட்டுப்போன இரண்டொன்றைப் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்கனவே இந்த சபையில் அனேக அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டியபடி, 2, 3 விஷயங்கள் முக்கியத் துவம் வாய்ந்தது. ஒன்று இது யுத்தகால பட்ஜெட் என்பது. இரண்டாவது அனேகமாக ஆண்டுக்கு ஆண்டு வரிகள் எல்லாம் மத்திய சர்க்காரால் போடப்பட்டிருப்பதினால் அதற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாத விதத்தில் இந்த சபையில் சர்ச்சை எழுந் திருக்கிறது. மூன்றாவதாக இது புது வரி ஒன்றும் இல்லாத பட் ஜெட் என்று சொன்னபோதிலும்கூட, புது வரிகள் ஏற்கனவே வேறு சட்டங்கள் மூலமாகப் போடப்பட்டுவிட்டதனால், அந்தச் சட்டங்களையும் சேர்த்து இந்த பட்ஜெட்டோடு இணைத்துப் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுவரையில் பேசின அநேக அங்கத்தினர்கள் பற்பல விதமாக ஆராய்ச்சி செய்து விட்ட பின்னால் ஒரே விஷயத்தை மாத்திரம் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அனேக அங்கத்தினர்கள் சொன்னார்கள். வரி தொழிலின் பேரில் விழுகிறது. அதை மாற்றி பணக்காரர்கள் மேல் விழுந்தால் அது நல்லது என்று சுட்டிக்காண்பித்தார்கள். இந்தப் பணக்காரர்கள் என்று வித்தியாசம் பிரித்துப் பேசுகின்ற விதத்திலே, ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விடுகிறார்கள். பணக்காரன் பேரிலே வரி போடுகிறோம் என்று சொல்லி ஏழை யின் பேரில் அந்த வரி விழுகிறது. நேற்று அதற்கு வெகுவான உதாரணம் ஒரு அங்கத்தினர் அவர்கள் சுட்டிக் காண்பித்தார்கள்.

பணக்காரர்கள் அல்லது சினிமா தொழில் அதிபர்கள் மீது அவர்கள் போடுகிற வரி அது சினிமா கலையின்பேரில் விழுகிறது. கடைசி பக்ஷத்தில் அந்த வரியை யார் கட்டுகிறது? ஏழை, எளியவன் சினிமாவுக்குப் போகவில்லையா? அவர்கள்தான் கொடுக்கிறார்கள் கடைசிபக்ஷத்தில். ஆகவே பணக்காரர்கள் பேரிலே போடுகிறோம் வரி என்று சொல்லிக்கொண்டு அதை ஏழைகளின் பேரிலே போடுகிற பொழுது கடைசி பக்ஷத்திலே அதைக் கொடுக்கிறவன் ஏழைஎளியவனாக இருப்பதாலே, அது ஏழையின் பேரில் தான் விழுகிறது. பணக்காரர்களைத் துண்டு பிரித்து அவர்கள் பேரிலே வரி போட்டால் பரவாயில்லை. ஆனால் பணக்காரர்கள் என்ற நிலைமையிலே தொழில் அதிபர்கள் பேரில் போடுவது ஏழையின் பேரிலே கடைசியாக விழுகிறது. இப்போதைய மத்திய அரசாங்க வரி ஒன்று இதற்கான எடுத்துக் காட்டாக இருக்கிறது. அதாவது இந்த Development Rebate இருக்கிறதே அதில் கைவைத்து விட்டார்கள். புதிய தொழில் ஆரம்பிக்கும் பொழுது அதற்கு ஏற்கனவே இருந்த சலுகைகளுக்கு ஒரு கஷ்டம் வந்து விட்டது முதல் விஷயம். இரண்டாவதாக வருமானத்திலே ஏற்கனவே கம்பெனிகளுக்கு 100-க்கு 50—என்ன வசூல் செய்தாலும் சரி, என்ன சம்பாதித்தாலும் சரி 100-க்கு 50—சர்க்காரிலே ஏற்கனவே கொடுத்துவிடவேண்டியதுபோக, இந்தத் 3–30 p.m. தடவை எப்படி அதைச் செய்திருக்கிறார்கள் என்றால் இத்தனை வரியையும் கொடுத்த அப்புறம், இன்கம்டாக்ஸ் முதலியவைகள் அளித்த பின்னால் 'Dividend' ஆனது 6 சதவிகிதத்திற்கு மேல் இருக்கும் பக்ஷத்தில் இதற்கு மேல் ஒரு வரி இருக்கிறது. இந்த வரிகள் கடைசி பக்ஷத்தில் யார் மேல் விழுகிறது? ஏதாவது ஒரு உற்பத்தியை எடுத்துக்கொள்ளலாம். தையல் இயந்திர உற்பத்தியை எடுத்துக் கொள்ளலாம். நிறைய வருமானம் வருகிறது. சரி ஏதோ சில பேருக்குச் சொற்ப வருமானம் வருகிறது. கடைசி பட்சத்தில் செலவைக் கூட்டிப் பார்க்கிறபொழுது, தையல் இயந்திரம் வாங்குபவர்கள் பேரில் விழுகிறது. இது தான் நிலைமை. ஏழையின் பேரில் வரி போடுகிறபொழுது சர்க்கார் யோசிக்க வேண்டியது முக்கியமான விஷயம். இது ஏழைகளை எவ்வளவு தூரம் பாதிக்கும்? இதனாலே ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்களா? ஒருபக்கம் ஏழை எவ்வளவு தூரம் சர்க்காருக்கு வரி கொடுக்க முடியுமோ . அத்தனையும் வாங்கவேண்டியதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் ஏழைக்கு இடைஞ்சலாக இந்த வரி போய்க்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் இன்று நேற்று திடீரென்று விழுந்த வரி மாத்திரம் ஜனங்கள் மீது சும்மா ஏறிவிடவில்லை. ஏற்கனவே சோஷலிஸம் என்ற அடிப்படையில் வரி, வரி என்று வரி அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது இந்த நாட்டில். அதற்கு வரி, இதற்கு வரி, என்று பல விதமான வரிகள் அதிகரிக்கப்பட்டுவிட்ட நிலையில் இந்த வரியையும் சேர்த்துப் பார்க்கிறபொழுது ஜாஸ்தியாகத் தெரிகிறது. மொத்தக் கணக்காக வருகின்றபொழுது 3-ல் ஒருபங்கு கூட வரி இல்லையே, வெளிநாடுகளில் மொத்த சம்பாத்தியத்தில் 3-ல் ஒரு பங்கு வரியாய்ப் போகிறது. இங்கு அவ்வளவு இல்லையே, 8-ல், 6-ல் ஒரு

9th March 1963] [திரு. எஸ். டி. ஆதித்யன்]

பங்கு வரி என்று சொல்லுகிறார்கள். இதிலே ஒரு விஷயம் கவனிக்கவேண்டிய விஷயம். எல்லோருடைய மொத்த வருமானத்தைக் கணக்கெடுத்து வரி கொடுப்பவர்கள், வரி கொடுக்காதவர்கள் என்று கணக்குப் பார்த்தால்—அது இருக்கட்டும். ஆனால் வரி கொடுப்பவர்கள் கணக்கைப் பார்க்கும்போது வெளிநாடுகளைவிட அவர்களுக்கு இங்கேதான் அதிகம் வரி. அதாவது அமெரிக்காவிலிருந்து இது சம்பந்தமாக வந்திருந்த கல்தார் என்பவர் சொன்னார். எல்லா வரியையும் பார்க்கிறபோது மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கிற வரி, மாகாண சர்க்காருக்குக் கொடுக்கிற வரி, முனிசிபாலிடிக்குக் கொடுக்கிற வரி இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கிறபோது 100-க்கு 50-க்கு மேல் போகிறது. இதனால் வியாபாரிகளைக் கள்ளத்தனம் செய் என்று சொல்லத்தான் அமைகிறது. 100-க்கு 50 வரையிலுமாவது சந்தோஷமாகக் கொடுத்து விடுவான். மேலும் போனால் கள்ளத்தனம் செய்கிறான். இன்னும் கம்பெனிகளுக்கு வரிகள் போட்டால், உற்பத்தி குறைய ஆரம்பிக்கும் என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உற்பத்தியைக் குறைப்பதனால் சர்க்காருக்கும் மக்களுக்கும் லாபமில்லை. வரி போடுவதில் அதிகமாக வரும்படி வருவதாகத் தெரிந்தாலும் கம்பெனியின் உற்பத்தி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மொத்தத்தில் எதற்காக நாம் வரி போட்டோமோ அது பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். வரி வசூலிப்பதற்குக் கஷ்டமாகவும் வரி கொடுப்பதற்கு வசதியில்லாமலும் போய்விடும். வரிகளை முதலில் கம்பெனிகளே கொடுத்துவிடுமென்று சர்க்கார் நினைக்கிறார்கள். மறுபடியும் கம்பெனியார்கள் சர்க்கார் காலில் போய் விழுகிறார்கள், வரி கொடுக்க முடியவில்லையே என்று. அதற்குப் பிறகு சர்க்கார் அவர்களைப் பார்த்து, பஸ் கட்டணத்தை உயர்த்திக்கொள், விலையை உயர்த்திக் கொள் என்று சொல்கிறார்கள். சர்க்கிள் மாதிரி மேற்கொண்டு மேற்கொண்டு கம்பெனிகளுக்குப் போடுகிற வரி தொழில்பேரில் சார்ந்து கடைசியில் ஏழைகளிடம்தான் வருகிறது. மொத்தத்தில் சேர்த்துப் பார்க்கிறபோது, வரி பளு அதிகமாகப் போகிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். 3-40 p.m.

* **திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் :** தலைவர் அவர்களே, 1963-64 வருஷத்திய நிதி நிலை அறிக்கையை வரவேற்று நான் பேச வாய்ப்பு அளித்ததற்கு மிக்க நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதிலுள்ள வரி விதிப்பும் எல்லோரும் வரவேற்கிற முறையில்தான் இருக்கிறது. ஏனெனில் அதிக வரியில்லாவிட்டாலும் இன்றிருக்கிற நிலையில் ஏற்றதாகவாவது போட்டிருக்கிறது. தற்போது இருக்கிற நிலையில் அது முக்கியமான விஷயமாகவே கருதப்படுகிறது. இன்று நமது தேசிய வருமானத்தைப் பார்த்தால், 14,200 கோடி ரூபாயில் நமக்குத் தனிப்பட்டவர்களுக்கு வரக்கூடிய வருமானம் அகில இந்திய ரீதியில் சற்றேறக்குறைய 250 ரூபாய் 1960-61-ல் இருக்கிறது. ஆனால் நமது தமிழ் மாநிலம் பெருமைப்

[திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்] [9th March 1963

படக்கூடிய விஷயம் என்னவென்றால் கிராஸ் இன்கம் 1,278 கோடி. இப்போது போடப்பட்டிருக்கிற வரியானது 120 கோடி ரூபாய்க்கு போடப்பட்டிருப்பதாகவும் 40 ரூபாய் வீதம் போடப்பட்டிருப்ப தாகவும் சொல்லப்படுகிறது. இன்றிருக்கிற நிலையில் நம் வரு மானம் எவ்வளவு ஏறியிருக்கிறது என்பதையும் ஒவ்வொருவரும் அறிகிறார்கள். ஆனால் இதைச் சேர்ந்த நாடுகளில் வருமானம் ஏறுவதால் ஜனங்களுடைய வாழ்க்கைத்தரமும் ஏறுகிறது. வரு மானம் ஏற அவர்கள் வழி காணவேண்டுமென்பதுதான் பெரும் நாடுகளிலும் அயல் நாடுகளில் கருதப்படுகிற முக்கியமான கருத் தாக இருக்கிறது. நமது நிதி மந்திரி சகல விஷயங்களையும் அறிந்தவர்கள். நன்றாகப் பழக்கம் உள்ளவர்கள். தகுந்தபடி அவர்கள் இன்று நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக் கிறார்கள். ஆனால் நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். ஊர்க்காவல் படையில் இப்போது இரண்டு ரூபாய் எட்டணா கொடுப்பதாகவும் 15 தினங்கள் மட்டும் பிராக் டிஸ் அதாவது அவர்களுக்கு பயிற்சி அளிப்பதாகவும் சொல்லப் படுகிறது. ஒன்றிரண்டு ரூபாய் அதிகமானாலும் 15 தினங்கள் பயிற்சி அளிப்பதை நாம் இன்னும் கொஞ்சம் நல்ல விதத்தில் கூட்டி தகுந்தவிதத்தில் பயிற்சி அளிக்கவேண்டும். உதாரணமாக நல்ல குளங்கள், கடல் இருக்கிற இடங்களில் அவர்களுக்கு நீச்சல் பயிற்சி அளிப்பது பற்றி முக்கியமாக நாம் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு முதலுதவி டிரெயினிங், ஷூட்டிங் போன்ற பயிற்சி அளிப்பது இதில் சேர்க்கப்படவேண்டும். ஷூட்டிங் அளிப்பது இருப்பதாக அறிகிறேன். போக்குவரத்து பயிற்சி போன்ற நல்ல பயிற்சிகள் அளித்து அவர்களை நிரந்தரமாக நியமித்துவிட்டால், நாட்டுக்குப் பின்னால் பயனுள்ள காரியங்கள் செய்ய உதவுவார்கள். மேலும் மீன் இலாகா அமைச்சர் அவர்களுக்குப் பணிவான வேண்டுகோள் என்னவெனில் வங்காள விரிகுடாக் கடலில் கார்பைட் போன்ற கடற்கற்கள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றை எந்த விதமான லைசன்சும் இல்லாமல் எடுத்து நெல்லை மாவட்டத்தில் இருக்கிற கார்பைட் பாக்டரிக்கு அனுப்புகிறார்கள். சிலிக்கா மணல், சிங்க் மணல், உருக்கு மணல் போன்றவைகளும் மீன் பிடிக்கக்கூடிய பெரிய பெரிய பாறைகளும் இருக்கின்றன. இதோடு முக்கியமாக முத்துக்கள், தூத்துக் குடியில் இருக்கிற முத்துக்களை அடியில் பதிந்திருக்கிற படிவங் களைப் பாதுகாக்கவேண்டும். இதைப் பாதுகாக்காவிட்டால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும்—ஒருவிதமான பாசி படர்ந்து அது கெட்டுவிடும். அதுதான் அதைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்கு முக்கியமான காரணம். மேலும் இந்த மீன் இலாகாவுக்கு 58 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. பாப்லோ போட்டுகள் செய்வதாக இருக்கிறது. இந்த போட்டுகளை நல்ல டெக்னீஷியன்களை வைத்து ஏற்ற இடங் களுக்குத் தகுந்தவாறு அமைத்தால் மிகவும் உபயோககரமாகவும் நல்ல வருமானம் அளிக்கக்கூடியதாயும் இருக்கும்.

விவசாயத்தில் நாம் பார்க்கிறோம். நெல்லை மாவட்டத்தில் இருக்கிற விவசாய நிலத்தில் ஜிப்சம் (gypsum) என்பதைத் தோண்டி எடுத்து அந்த இடத்தை அப்படியே போட்டுவிட்டு

9th March 1963] [திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்]

சிமிந்தி பாக்டரிகளுக்கு எடுத்துப்போய்விடுகிறார்கள். அந்த நிலம் மேற்கொண்டு விவசாயத்திற்கு பயனில்லாமல் போய்விடுகிறது. இப்போது நிலத்தை ஆர்ஜிதம் பண்ணியிருக்கிறோம். ஆர்ஜிதத்திற்குக் கூடிய சீக்கிரம் நாம் முடிவு கண்டால் அந்த நிலங்களுக்குக் காம்பன்சேஷன் கொடுக்கலாம். அல்லது வேறு இடத்திலும் நாம் கொடுக்கலாம். அல்லது ஒரு ஆண்டு காலத்தில் அந்த நிலத்தில் நாம் விவசாயம் செய்யவோ அல்லது உற்பத்தி செய்யவோ ஒரு முடிவுக்கு அவர்களுக்கு விடலாம். மேலும் தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றி அனேகர் பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றி மேலும் பேச அவசியமில்லாவிட்டாலும் நாட்டின் தங்கத்தை விட தாய்நாடுதான் பெரிது என்பதை ஒவ்வொரு தன் மானமுள்ளவர்களும் உணருகிறார்கள். பெரியவர்களும் உணருகிறார்கள். ஆனால் பொற்கொல்லர்கள் விஷயத்தில் மட்டும்தான் இப்போது ரெப்ரசென்டேஷனில் அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்கான காரணங்களும் சொல்லப்படுகிறது.

அரசாங்கம் கருணை கூர்ந்து இதையும் கவனத்தில் வைத்து அவர்களுக்குக் கூடிய விரைவில் வேலை வாய்ப்பு அளிக்க ஏற்பாடு பண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் கல்வி விஷயத்தில் கனம் மெம்பர் அவர்கள் சொன்னார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் 5 அல்லது 10 பேர்தான் சம்பளம் கொடுக்கிறார்கள், மற்றவர்கள் சம்பளம் கொடுப்பதில்லை, எப்படியோ அவர்கள் இனமாகப் படிக்கிறார்கள். இதை நாம் கூடிய விரைவில் போக்க வேண்டும். இதைச் செய்தால் இந்த விதமான செலவினங்கள் மேலும் குறையும். இரண்டாவது பின் தங்கியவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகை, சோஷலிசம் என்ற கொள்கையைச் சொல்லும் நாம் எந்த அளவிலும் பாகுபாடு பார்க்கக்கூடாது. எல்லா சமூகத்திலும் ஏழைகள் இருக்கிறார்கள். ஒரு சமூகத்தில்தான் இருக்கிறார்கள், மற்ற சமூகத்தில் இல்லை என்று சொல்வதைவிட ஏழை என்ற ஒரே Economic Basis -ல் எடுத்து பாகுபாடு இன்றி அளித்தால் இன்னும் நம் மேல் இருக்கும் குறைகள் நீங்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மேலும் இப்போது மின்சாரத் திட்டத்தில் நல்ல வாய்ப்பு இருக்கிறதாக எனக்குத் தெரிகிறது. என்னைவிட கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் தூத்துக்குடியைப் பொறுத்த வரையில், இரண்டு Line கள் ஒன்று பெரியாற்றிலிருந்து மற்றொன்று பாபநாசத்திலிருந்து வருகின்றன. இந்த இரண்டு லைன்களையும் ஒன்றாக இணைத்தால், நமது வருங்காலத் துறைமுக அபிவிருத்திக்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும். இரண்டாவது, பாபநாசத்தில் எப்போதும் தண்ணீர் இருந்துகொண்டே இருக்கிறது. மற்ற அணைக்கட்டுகளில் தண்ணீர் குறைந்தாலும், பாபநாசத்தில் தண்ணீர் இருக்கிற வகையால் மேலும் அதில் ஒரு generator -ஐப் போட்டால் அது இன்னும் வரும் காலத்தில் தூத்துக்குடித் துறைமுக அபிவிருத்திக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

[திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர்] [9th March 1963

போக்குவரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் நடத்தும் போக்குவரத்தில்தான் குறை என்று சொன்னார்கள். இருந்தாலும் இந்த நெல்லை மாவட்டத்தில் ஒரு பஸ்ஸுக்கு ஒரு permit -க்கு 50,000 ரூபாய்க்கு விலை பேசுகிறார்கள். ஏனென்றால் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அதிக பஸ் ரூட் கொடுப்பதில்லை. அதாவது Collector அவர்களும் R.T.O. அவர்களும் recommend பண்ணியும் நமது Transport Commissioner அவர்கள் திரும்ப நிராகரித்து விட்டார்கள். ஆகையால்தான் நெல்லை மாவட்டத்தில் விசேஷமாக தூத்துக்குடியில் நல்ல வாய்ப்பு இருப்பதால், ஒரு பஸ்ரூட் பெர்மிட்டுக்கு 50,000 ரூ. விலை பேசுகிறார்கள், பேச எத்தனிக்கிறார்கள். அல்லது மாற்றவும் எழுதி இருக்கிறார்கள். ஆகையால் திருநெல்வேலி போன்ற மாவட்டத்தில் பஸ்களை அதிகமாக விடலாம். எந்த விதமான பேரத்திற்கும் இடமில்லாமல் போய்விடும் என்று சொல்லிக் கொண்டு எங்களுக்கு மருத்துவக் கல்லூரி அமைத்ததற்காக எங்கள் மாவட்டத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனக்கு இங்கே பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Sri K. R. Ramasamy will now speak. The hon. Mmber will please make a short speech and finish at 4 O'clock.

திரு. கே. ஆர் .இராமசாமி : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நான்
3–50 p.m. எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லும்போது ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் ஆத்திரப்பட்டு மாநகராட்சி மன்றத்தின் மேல் சில அங்கத்தினர்கள் தங்களுடைய கோபத்தைக் காட்டிக் கொண்டார்கள். உண்மையாகவே இன்றைய தினம் நாட்டிலே வரிக் கொடுமையால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேருவின் கையைப் பலப்படுத்துவோம் என்று சொன்னவர்கள் இப்போது என்னென்னவோ சொல்லுகிறார்கள் என்று பேசுவதிலே இறங்கி இருக்கிறார்கள். உண்மையாக நான் சொல்லுகிறேன். எங்களுடைய தலைவர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்களோ, அதன் பிரகாரம் நாட்டுப் பாதுகாப்பிலிருந்து நாங்கள் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் தவறினாலும், மாற்றுக் கட்சியாகிய நாங்கள் என்றுமே தவற மாட்டோம். சீனாக்காரன் இந்த நாட்டை விட்டுப் போகும் வரையில் எங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாகக் கிடைக்கும். அதை விடுத்து, கொடுக்க வேண்டியதைக் கொடுத்து பெறவேண்டியதைப் பெற்றோம் என்று சொன்னார்கள். இந்த வகையில் உண்மையிலேயே நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். என்னுடைய எண்ணங்களுக்கு ஏற்றவர் அவர். அவர் தி.மு.க.-வுக்கு சென்னை மாநகராட்சி மேயர் பதவியைக் கொடுத்து பெற வேண்டிய ஒத்துழைப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஒத்துழைப்பு என்றால் நாட்டுப் பாதுகாப்புக்கான ஒத்துழைப்பு.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் கொடுத்ததுமில்லை பெற்றதுமில்லை.

9th March 1963]

திரு. கே. ஆர். இராமசாமி : இருக்கலாம். இருந்தாலும் நீங்கள ாக அந்த யோசனையைச் சொன்னீர்கள். மேயர் பதவியை தி.மு.க. வினரே வகிக்கலாம் என்று சொன்ன யோசனையைக் குறிப்பிடுகிறேன். ஆகவே நாம் இப்படி சர்ச்சையில் இறங்குவது முறையல்ல. நம் கனம் அங்கத்தினர் அவர்கள் 81 லட்சம் பற்றிய File மாநகராட்சி மன்றத்தில் இருந்தது. அது இரண்டு வருஷம் காணுமல் போயிருந்து 41 லட்சமாகத் திருத்தி திரும்ப வந்தது என்று சொன்னர்கள். உள்ளபடியே மாநகராட்சி மன்றத்தில் குறைகள் சொல்ல வேண்டுமென்ருல், நிறைய குறைகள் சொல்லிக் கொண்டே இருக்கலாம். அவர்கள் ஆண்ட காலத்தில் பல குறைகள் இருந்தன. அந்தக் குறைகளே யெல்லாம் நாங்கள் சொல்லவில்லே. அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வந்த கார்டூனேக்கூட எடுத்துச் சொன்னர். இவர்களேப் பற்றிச் சொல்ல வேண்டுமானல், பைரவர்கள் வீடு கட்ட இருந்த பணம் எப்படியோ போயிற்று என்று மாநகராட்சி மன்றத்தில் உள்ள எங்கள் கட்சி உறுப்பினர்கள்கூட சொல்கிருர்கள். ஆகவே அந்த சர்ச்சையில் இறங்கத் தேவையில்லே. அந்த பைல் எங்கேயும் காணுமல் போய்விடவில்லே. 31 லட்சம் ஒதுக்கப்பட்டது. 2 வருஷம் கழித்து மவுண்ட்ரோடு பூராவும் விரிவுபடுத்த வேண்டும் என்று சொன்னதால் 41 லட்சமாக மாற்ற வேண்டி ஏற்பட்டது. ஆக பைல் எங்கேயும் காணுமல் போய்விடவில்லே. மொத்தம் 3 பைல்கள். அவைகள் அப்படியே இருக்கின்றன. ரூ. 1,500 சம்பளம் வாங்குகிற அதிகாரி ஒருவர் மீது நாம் வீண் பழியைச் சுமத்தக்கூடாது.

திரு கே. இராமதாஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். அந்த பைல் எத்தனே ஆண்டுகாலமாக Council -க்கு வந்து அது Council- ல் பாசாகாமல் இருந்தது ?

திரு. க. அன்பழகன் : Council க்கு பைல் வரவில்லே என்ருல், பைல் காணுமற் போய்விட்டது என்று அர்த்தமா?

திரு. கே. ஆர். இராமசாமி : ஆகவே நான் நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து இதற்கு என்று ஒரு தனியான குழு ஒன்றை ஏற்படுத்துங்கள். நாங்கள் நிச்சயமாக அதற்கு வேண்டிய உதவியைச் செய்யக்காத்திருக்கிறோம். அதற்கு யாரைக் கூப்பிட்டு வரவேண்டுமோ அவர்களே யெல்லாம் கூப்பிட்டு வருகிறேன். இது எப்படி நடந்தது, என்ன காரணம் என்று விசாரணே செய்வோம். அதில் தவறு இருந்தால், எங்கள் மீது மாநகராட்சி மன்றத்தின்மீது குற்றம் சாட்டியவர்கள் மன்னிப்புப் பெறவேண்டும். இல்லாவிட்டால் குற்றம் இருந்தால் நான் மன்னிப்புப் பெறுகிறேன் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான் அதிகம் பேச வேண்டும் என்று வந்தேன். ஆனல் இப்போது பேசவிரும்பவில்லே. கனம் அங்கத்தினர் அவர்கள் திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்களேச் சிறையில் அடைக்க வேண்டும் என்றுகூட பேசினர். மற்ற பொதுக்கூட்டங்களில் பேசுவதைப் போல இந்த மாமன்றத்தில் நம் பேச்சுக்கள் அமையக்

[திரு. கே. ஆர். இராமசாமி] [9th March 1963

கூடாது. இந்த மன்றத்தில் என்ன பேச வேண்டும் என்ற நிலைமையை ஆராய வேண்டும். திரு. இராஜகோபாலாச்சாரியார் இன்றைய தினம் வேறுபட்டு தன் எண்ணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். அவர் பெரிய பதவியை வகித்தவர். சுயராஜ்யம் வாங்க ரொம்பவும் பாடுபட்டவர். அவர் தியாகத்தின் முன் நாம் எந்த மூலையில் இருக்கிறோமோ, எந்தக் கோடியில் இருக்கிறோம் என்றுகூட தெரியாது. அப்படிப்பட்ட நிலையில் இருப்பவரைப் பற்றி இந்த மன்றத்தில் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லக்கூடாது என்று கூறி எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி இதோடு முடித்துக் கொள்ளுகிறேன்

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் தலைவரவர்களே, கடைசியாகப் பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் சிறந்த கலைஞர். அவர்களுக்குக் கொஞ்சம் ஆத்திரம் வந்தது. சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பற்றி வேறு ஒரு உறுப்பினர் நேற்று பேசினார்கள். அதைப் பற்றி அவர்கள் குறிப்பிடும் போது கொஞ்சம் ஆத்திரம் ஏற்பட்டது. அல்லது ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள். காட்டினார்கள். எனினும் 6 நாட்களாக இந்த மன்றத்தில் நடைபெற்ற விவாதம் குறித்து, விவாதத்தின் தரம் குறித்து, நாம் எல்லோரும் பெருமைப் படலாம். ஆறு நாட்களாக வரவு-செலவுத் திட்டம் இங்கே நல்ல முறையில் விவாதிக்கப்பட்டது. அதற்கு நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுவேன். இந்த மன்றத்திலே சென்ற பதினாறு ஆண்டுகளுக்கு மேலாக இரு உறுப்பினர்கள் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களை "சுடர்விளக்கு" என்றே செல்லுவேன். இரு அங்கத்தினர்களும் இப்பொழுது என் எதிரே இருப்பதினால் எனக்குக் கொஞ்சம் சங்கடமாகக் கூட இருக்கிறது, அதைக் குறிப்பிடும் போது எனக்கு நேர் எதிரே வீற்று இருக்கின்ற அங்கத்தினரை முதலில் குறிப்பிடாமல் கொஞ்சம் தூரத்தில் வீற்றிருக்கின்ற அங்கத்தினரைக் குறிப்பிடுகிறேன். கனம் அங்கத்தினர் சுடர் ஒளி என்று சொன்னேன். ஸ்ரீமதி ஜாதவ் அவர்கள் பேசும்போது மிக அழகாக, விஸ்தாரமாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே, எல்லோரையும் வசீகரிக்கக்கூடிய வகையிலே பேசினார்கள். முக்கியமாக அரசாங்கத்தின் எல்லா அலுவல்களையும் கொஞ்சம் தாராளமாகவே பாராட்டி என்னென்ன செய்ய வேண்டுமென்றும், அந்தப் பாராட்டுதல் மூலமாகவே எங்களிடம் மேலும் பெற வேண்டியதைப் பெறவும், ரொம்ப அழகாக பல கோரிக்கைகளையும் தேவைகளையும் எடுத்துக் கூறினார்கள். அவர்களுக்கு நான் முதலில் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் குறிப்பிட்டது போல் நான் திருப்பி குறிப்பிடவில்லை என்றால், நான் அவைகளைக் கவனிக்கவில்லை என்று அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. இவ்வளவு பாராட்டுகிறேன் என்று சொன்னால், கேட்பதை எல்லாம் கொடுத்து விடுகிறேன் என்று அர்த்தமல்ல. ஆனால் கவனம் செலுத்துவோம். அவர்கள் சமூகத்துறையிலே மிகுந்த

9th March 1963] [திரு. எம் பக்தவத்சலம்]

ஆர்வத்துடன் பாடு படுகிறார்கள், பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அதை உணராமல் சில பேருக்குப் பொறாமை ஏற்படுகிறது. அவர்கள் எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்று புரிந்து கொள்ளாமல், அடிக்கடி இவரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று சிலருக்குப் பொறாமை ஏற்படுகிறது. அந்தப் பொறாமைக்கு நியாயமில்லை. அவர்கள் நன்றாகப் பணியாற்றுகிறார்கள் என்பது அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் குறிப்பிட்ட பிரச்னையைப்பற்றி மேலும் என்னென்ன வகையிலே கவனம் செலுத்தலாம் என்பதைப் பற்றி நான் கவனம் செலுத்துவேன் என்று மட்டும் சொல்லி அதை முடித்துக் கொள்ளுகிறேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இவ்வாறே 16 ஆண்டுகளாக இந்த மன்றத்தை அலங்கரித்து வருகிறார்கள். எதிர்க் கட்சித் தலைவராகவே அலங்கரித்து வருகின்றார். அவர்களும் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர் தெரிவிக்கின்ற கருத்துக்கு இந்த அரசாங்கம் மிகுந்த மதிப்பை அளித்துக் கொண்டு வருகிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அவர்கள் பேசிய சிலவற்றைப்பற்றியும் நான் பின்னாலே குறிப்பிடுகிறேன். 4 00 p.m.

வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் சாதாரணமாக என்ன செலவு, என்ன வரவு, செலவுக்கும், வரவுக்கும் எந்தெந்த வகையிலே வழி தேடுவது என்று பார்த்து ஒரு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதும், மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் வரவு-செலவைச் சரிக்கட்டுவதும், அப்படி சரிக்கட்ட முடியவில்லை என்றால், வரிகளைப் போட்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதும், வரிகள் போட்டால் அதற்கு என்ன அவசியம் என்பதை எடுத்து விளக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் அரசாங்கத்தைச் சார்ந்ததாக இருக்கிறது. ஆனால் இந்த முறை வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பித்திருக்கிற ஒரு நிலைமை—கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்—இது விபரீதமான ஒரு நிலைமை, நெருக்கடியான நிலைமை. இந்தநிலை கனம் எதிர்க்கட்சித் தலைவர் எச்சரித்ததுபோல் சீக்கிரத்தில் மோசமான நிலைமையாகலாம், ஆகக்கூடும் என்று நாம் எதிர்பார்க்கவேண்டும். ஆகாவிட்டால்—கடவுளிடத்தில் நம்பிக்கை உள்ள நாம்—நன்றி செலுத்துவோம். அப்படி நம்பிக்கை இல்லாதவர்கள் சீனர்களுக்குத் தெரிவிக்கட்டும். இப்பொழுது நாம் ரொம்ப மோசமான நிலைமை வரக்கூடும் என்று எதிர் பார்த்தால்தான் நல்லது. மோசமான நிலைமை வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை. மோசமான நிலைமை சீக்கிரத்தில் ஏற்படக் கூடும் என்று நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்காக நம்மை இப்பொழுதே தயார்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எதிரிகள் நயவஞ்சகர்கள் என்று கூறப்படுகிறார்கள். அவர்கள் திடீரென்று எவ்வாறு நம்முடைய நாட்டின்மீது அதிக அளவிலே படையெடுத்துத் தாக்கினார்களோ, அதே மாதிரி திடீரென்று நாங்கள்

[திரு. எம் பக்தவத்சலம்] [9th March 1963

சுடுவதை நிறுத்தி விட்டோம் என்று சொன்னாலும்கூட நயவஞ்சகர்களை நம்பியிருக்கக்கூடாது என்று மேலும் மேலும் புலப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்மையிலேயே சமாதானமாக இந்த நாட்டை விட்டுப் போக வேண்டுமென்று அவர்களுக்குப் பிரியம் இல்லை. ஏதோ ஏமாற்றலாம் என்று வருகிறார்கள் என்றுகூட இப்பொழுது வர வர நமக்கு அதிகமாகப் புலப்பட்டுக் கொண்டு வருகிறது. ஆக நிலைமை மோசமாக ஆகலாம். ஆனால் எல்லோரும் ஒரே முகமாக இந்த நாட்டை எப்படியும் பாதுகாத்தாக வேண்டும், அன்னியரை விரட்டியாக வேண்டும். எந்த விதத்திலும், உதவுகிறோம், உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்ற முறையிலேதான் எல்லோரும் ஒரே மனமாக நம்மோடு ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நெருக்கடி நிலையை எப்படி சமாளிப்பது, பாதுகாப்பை எப்படி பலப்படுத்துவது, அந்தப் பொறுப்பை எவ்வாறு நாம் வகிப்பது என்பதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திலே நாம் சமர்ப்பித்திருக்கிற வரவு-செலவுத் திட்டம் மட்டுமில்லை. இதைத் தனியாகவே நாம் கருத முடியாது. எப்படி இங்கே பேசிய கனம் அங்கத்தினர்கள் கொஞ்சம்கூட இடமில்லை என்றாலும் மத்திய வரிகளைப்பற்றிப் பேசினார்களோ, அவை மத்திய வரிகள் என்றாலும் நம்மைத்தான் பாதிக்கும். இந்த மாகாண மக்களை பாதிக்கும். நல்லது செய்தாலும் நம்மைதான் வந்து சேரும், தனியாக மத்திய அரசாங்கம் என்று ஒன்றுமில்லை, அப்படி பாதுகாப்புக்கு ஆபத்து என்றால் அதைத் தவிர்க்க வேண்டிய பொறுப்பு நமக்கும் உண்டு. அந்த வகையில்தான் மத்திய வரிகளைப் பற்றி எல்லாம் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதேமாதிரி நம் மாகாண வரவு-செலவுத் திட்டத்தை நாம் இங்கே சமர்ப்பித்த முன்தினம் டெல்லியில் மத்திய வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மத்திய வரவு-செலவுத் திட்டத்திலே புதிய வரி இனங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. நம்முடைய பட்ஜெட் அதனாலே over shadowed என்று சொல்ல முடியாது. இது ஒன்றோடொன்றுஇணைக்கப்பட்டு பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் பல அங்கத்தினர்கள் மத்திய பட்ஜட், மத்திய வரிகள் என்று எல்லாம் பேசினார்கள். அவர்களும் அதைத்தடுக்கவில்லை. அதையும் சேர்த்துத்தான் நாம் பார்க்க வேண்டும் என்று நான் ஒத்துக் கொள்ளுகிறேன். கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள்கூடச் சொன்னார்கள். எல்லோரும் ஒரே மனமாக இருக்கிறோம், நாட்டைப் பாதுகாப்பதிலே என்று. ஒரே மனமாக இருக்கிறோம் என்று பேசுவது முதல் வேலை. பேச வேண்டியதுதான். பேசுவதோடு நிறுத்திக் கொள்ளக்கூடாது. எப்படிப் பாதுகாப்பது என்று பேசுவது மாத்திரம் போதாது. எப்படிப் பாதுகாப்பு செய்வது? எவ்வளவு தியாகம் வேண்டுமானாலும் செய்தாக வேண்டும். ஏன் இங்கே இருந்து நம் சைன்யங்கள் அங்கே போய் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள்? யாருக்காகக் கொடுத்தார்கள்? தங்களுக்காகக் கொடுத்தார்களா?

9th March 1963] [திரு. எம் பக்தவத்சலம்]

நம்முடைய சந்ததிகள், நாமெல்லாம் சௌகரியமாக வாழ்வதற்காகக் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் நாம் அதிகம் செய்ய வேண்டாமா என்று கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் தீவிரமாக யோசிக்க வேண்டும். தியாகம் செய்ய வேண்டியது அவசியம் என்று ஒப்புக் கொள்ளுகிறோம் என்றால், எப்படித் தியாகம் செய்வது? புதிய வரிகள் இந்த மாநிலத்தில் நாங்கள் போட்டாலும், மத்திய ஆட்சியில் போட்டாலும் அந்த வரி வேண்டாம் என்று சொல்லுவதாகுமா? அந்தச் செலவுக்கு வேறு ஒரு யோசனை சொல்லுகிறோம், அந்த யோசனையை ஏற்றுக் கொள்ளலாம். இந்த வரியை எடுத்துவிட்டு வேறு ஒரு வரி போடலாம், வேறு வருமானத்துக்கு வழி செய்கிறோம். வரி போடாமல் வேறு ஒரு யோசனை சொல்லுகிறோம். அந்த யோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அதைக் கவனிப்போம். இவ்வளவு பாதுகாப்புக்கூட வேண்டியது இல்லை. நாங்கள் மந்திரம் போட்டு அத்தனை எதிரிகளையும் வெளியேற்றுகிறோம் என்று சொன்னால் அதைக் கவனித்துப் பார்க்கலாம். அந்த மந்திர சங்கதியில் சில பேர் நம்புகிறார்கள். ஆனால் எனக்கு நம்பிக்கையில்லை. சில பேர் நம்பலாம். அல்லது பாதுகாப்புக்கு இவ்வளவு செலவு இல்லாமல் இந்த நடவடிக்கைகளை இன்னும் சுலபமாக பழைய அம்பு, வேல் கொண்டு சீனர்களை விரட்டி அடித்துவிட முடியும் என்றால் செய்யலாம். ஆனால் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டும் என்பதில் உடனடியாகப் பலப்படுத்துவதில், பலப்படுத்தி அன்னியர்களை, எதிரிகளை விரட்டி அடிக்க வேண்டும் என்பதில் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் உறுதியுடன் இருக்கிறார்கள்; உதவி பெறுகிறார்கள். உலகத்திலே ஒன்று, இரண்டு நாடுகளைத் தவிர மற்ற நாடுகளெல்லாம் நம்முடைய விஷயத்தில் மிக அனுதாபத்துடன் இருக்கின்றன. உதவி அளித்துக் கொண்டு வருகிறார்கள். முன்பு நாம் வெளியேற்றினோமே, வற்புறுத்தி வெளியேற்றினோமே, ஒரு சிக்கலான நிலைமையிலே, ஒரு பயங்கரமான நிலைமையிலே அவர்கள் சென்ற இரண்டாவது மகா யுத்தத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் "நீங்கள் வெளியேறுங்கள்" என்று வெளியேற்றினோமே, அவர்களை, அன்பு நெறியைக் கடைப்பிடித்து வெளியேற்றினோம். ஆகவே அவர்கள் தான் நமக்கு உதவி அளிப்பதில் முதன்மையாக நிற்கிறார்கள். வேண்டியதைக் கொடுக்கிறோம்; நீங்கள் வளர்ந்த பின்னால் அவற்றைக் கொடுங்கள்; பணம்கூடக் கொடுக்கவேண்டாமென்று சொல்கிறார்கள். அமெரிக்கர்கள்கூட பின்னால் கணக்கு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் அதையே நாம் நம்பியிருக்க முடியாது. நாம் இங்கு பாதுகாப்பைப் பல வகையில் பலப்படுத்த வேண்டும். நவீன முறையில் நடைபெறுகிற யுத்தத்தில் வெளி நாடுகள் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு மற்ற இடங்களிலிருந்தும் கொடுக்கிறார்கள் என்றாலும், அதற்குமேல் அதை நாம் எதிர்ப்பாராமல் நாமே உற்பத்தி செய்ய முற்படவேண்டும். இப்போது பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகரத்தில் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு பாதுகாப்புக்கு வேண்டிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி உற்பத்தி செய்துவருகிறார்கள். பதினைந்து நாட்களுக்கு

முன்பு அமெரிக்காவிலிருந்து Top ranking experts என்று சொல்லக் கூடிய நிபுணர்களை அனுப்பினர்கள். ஆயுத தளவாடங்கள் உற்பத்தி செய்ய அட்வான்ஸ் இண்டஸ்ட்ரியில் அனுபவம் உள்ளவர்கள் டில்லிக்கு வந்தவர்கள் சென்னையில் வந்து நடைபெறுகிற உற்பத்தி வேலைகளைப் பற்றி யோசனை சொல்வதற்காக இங்கு வந்தார்கள். அந்தக் குழுத் தலைவர் என்னிடம், 'தமிழ் நாட்டில் பார்த்த வரை எங்களுக்கு ரொம்ப திருப்தி, ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது, நல்ல முறையில் வேலைகள் நடக்கின்றன' என்று சொன்னார்கள். தொழில் அதிபர்களும் மிகுந்த அக்கரையோடு ஒத்துழைக்கிறார்கள். தொழிலாளர்கள் மிகுந்த உற்சாகத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். 24 மணி நேரமானாலும் நாங்கள் வேலை செய்கிறோம், வேலை கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அற்புதமான உற்சாகத்தையும் உணர்ச்சியையும் அவர்களிடம் பார்க்கிறோம். அதனால் ஓரளவு அதில் ஈடுபட்டிருக்கிறோம். அது போதவே போதாது. இன்னும் சில மாதங்களில் பெரிய அளவில் எதிரிகள் நம் நாட்டின் மீது தாக்குவார்கள் என்றால் நாம் இப்போதிருந்தே தயாரித்துக் கொள்ளவேண்டும். வசதி செய்து கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில் நம்மைப் பொருத்தவரையில் ஓரளவுக்கு வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்திருக்கிறோம். மற்றொரு
4.10 p.m. பக்கத்தில் அபிவிருத்தித் திட்டங்களைக் குறைக்கக்கூடாது என்று நமது பிரதம மந்திரி அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். அபிவிருத்தித் திட்டங்களைக் குறைக்கவில்லை. கட்டிடங்களைக் கட்டுவதை நிறுத்தி வைத்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றுவதிலும் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 58% மூன்றாவது ஆண்டு முடிவதற்குள் நாம் முடித்துவிட வேண்டுமென்று லட்சியத்தை வைத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறோம். மத்திய ஆட்சியிலும் திட்டங்களைக் குறைக்கக்கூடாது என்று அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். திட்டத்திற்குப் பணம் வேண்டும். அது இல்லாமல் பாதுகாப்புக்கும் பணம் வேண்டும். அதைத் தான் நாம் பார்க்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இந்த மன்றத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னது எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டபொழுது நான் சொன்னேன். அதில் கணக்குப் பார்த்ததில் நமக்கு 35 கோடி அதிகமாகத் தேவைப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொருத்தவரை பழைய வரிகள் இருக்கின்றன. மேலும் மத்திய சர்க்காரிலிருந்து வரக் கூடியவையெல்லாம்போக, அவர்கள் திட்டக்குழுவில் 43 கோடி வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் இங்கே கணக்குப் போட்டதில் 35 கோடி போதுமென்று சொன்னோம். அந்த 35 கோடிக்குத்தான் நாம் வரி போடவேண்டியிருக்கிறது. அதற்குத் தான் இதுவரையில் போட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் சுப்பையா செட்டியார் அவர்கள் நிலவரி, நீர்வரி, நகர்ப்புற நிலவரி யெல்லாம் சேர்த்து சொன்னார்கள். இவை புதிதாகப் போடவில்லை. இப்போதுதான் சட்டம் வந்திருக்கிறது. சென்ற ஜூலையில் வந்த வரவு-செலவுத் திட்டத்தில் இந்த வரி எல்லாம் போட்டிருக்கிறோம்.

9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

இதையெல்லாம் போட்டுக் கணக்குப் பார்த்துத்தான் திட்டத்திற்கு 35 கோடி வேண்டுமென்று தீர்மானித்தோம். அதைக் கொஞ்சம் ஆராய்ந்து சட்டம் செய்யலாம், அவசரப்பட்டுச் சட்டம் செய்ய வேண்டாமென்றுதான் இத்தனை நாள் இருந்தோம். மார்ச் மாதம் முதல் தேதி இந்த மன்றம் நில, நீர் வரிச் சட்டத்தை ஏற்றுக் கொண்டது. இன்னும்கூட நகரத்திலுள்ள மனைகளுக்குப் போடுகிற வரி இன்னும் பொறுக்குக் குழுவில் இருக்கிறது. அதை நன்ருக ஆராயவேண்டும். பத்திரிகைகள் ஆக்கமுறையில் ஆலோசனைகள் தந்திருக்கின்றன. இதையெல்லாம் கவனிக்கவேண்டுமென்பது என் எண்ணம். எந்த விதத்தில் மாற்றுவது ? வரி கொடுக்கிறவர்களுக்கு பாரம் இருக்கக்கூடாது. நமக்கும் வருமானம் வந்தாக வேண்டுமென்றுதான் பொறுக்குக் கமிட்டியில் போட்டு அபிப்பிராயம் சொல்கிறவர்களையெல்லாம் ஏப்ரல் 15, 16 தேதிகளில் சொல்லலாம் என்றும் அதற்குப் பிறகு சட்டம் செய்யலாமென்றும் வைத்திருக்கிருேம். அதற்கெல்லாம் சேர்த்துத்தான் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு நமக்கு 35 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்னேம். திட்டக் குழுவில் சொன்னது 43 கோடி. நாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் சொன்ன 35 கோடிதான் ஆகிறது. நம்முடைய லட்சியப்படி மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிருேம். ஆனல் இந்த வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போது நம்முடைய பொறுப்பு இதற்கு மேல் கூடி பாதுகாப்பு வகையில் எதிர்பாராத செலவுகள் வருகின்றன. அதற்கும் நாம் வகை கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. கல்வித் துறையில் செலவைக் குறைக்கவில்லை. இரண்டு கோடி அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. ராணுவப் பயிற்சி, என்.சி.சி., அது இல்லாமல் ஹோம் கார்ட்ஸ் இருக்கிறது நம்முடைய போலீஸ் படையினர் எல்லையில் தொண்டு புரிகிருர்கள். அதற்கு மத்திய அரசாங்கம் செலவை ஏற்றுக்கொள்கிறது. இருந்தாலும் போதாதென்று போலீசாரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்குச் செலவாகிறது. பாதுகாப்புத் தொழில்களை ஒட்டி சில ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய தண்ணீர் சப்ளை செய்யவேண்டும். அதற்குத் திட்டம் வேண்டியிருக்கிறது. டீசல் இன்சின் பேக்டரி, டூல் பாக்டரி, இவைகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் அளிக்கவேண்டியிருக்கிறது. அதற்கெல்லாம் செலவாகிறது. இவையெல்லாம் திட்டத்திற்கு மேற்பட்ட செலவு. திட்டத்துக்குப் புறம்பாகக்கூட அவசியமான சிலவற்றை நிறைவேற்றி வருகிருேம். மத்திய அரசாங்கமும் திட்டத்துக்குப் புறம்பான வகையில் உதவி அளித்துக் கொண்டுதான் வருகிருர்கள். உத்தியோகஸ்தர்களுடைய பஞ்சப்படி உயர்வுக்கு மத்திய அரசாங்கம் முன்னே நஷ்டஈடு கொடுத்தார்களே இப்போது மட்டும் கொடுக்கவில்லையே என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனல் இப்போது மூன்ருவது ஃபைனன்ஸ் கமிஷன் சிபாரிசுப்படி 3 கோடி ரூபாய் அட்-ஹாக் கிராண்ட் ஆக அளிக்கிருர்கள். பஞ்சப்படி அதிகமாகக் கொடுப்பதற்காக கொடுக்கிருர்கள். இப்போது திட்டத்திற்குப்

புறம்பாக unplanned திட்டம் என்று சில நிறைவேற்றுகிறோம். நம்முடைய மாநிலத்தில்கூட நெருக்கடி நிலையை ஒட்டி எதிர் பாராத செலவு, அதிகமான செலவு, விசேஷமான செலவு ஏற் படுகிறது. அப்படி ஏற்பட்டபோதிலும் நாங்கள் அதற்காக வரி போடவேண்டியதில்லை. போடாமலே சமாளித்துக்கொள்ளலாம் என்றுதான் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறோம். வரியே இல்லாத பட்ஜெட்டை யாராவது சுதந்திராக் கட்சியில் தயாரித்துக்கொடுத்தால் நான் அதைப் பார்த்துப் படித்துக் கொள்வேன்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : சந்தர்ப்பம் இருந்தால், அதையும் தயாரிக்க முடியும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த நாடும் வரியே இல்லாத பட்ஜட் போட்டதாகத் தெரியவில்லை. புதுவரி இல்லை என்றால் மற்றவரிகள் இல்லையா என்று வரியே இல்லாத பட்ஜெட் தயாரித்த மாதிரி பேசுகிறார்கள்.

திரு. எம். சுப்பையா செட்டியார் : வரியே இல்லாத பட்ஜட் யார் செய்ய முடியும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சுதந்திராக் கட்சி போக்கே தனிதான். அதைப் பற்றியெல்லாம் இப்போது பேசுவதற்கு என்றால் முடியாது. சுதந்திராக் கட்சியில் அவர்களுடைய பாணியை அவர்கள் சொல்லுகிறார்கள். சுதந்திராக் கட்சிப் பிரதி நிதியிடமிருந்து வேறுவகையான விமர்சனத்தை நாம் எதிர் பார்க்கமுடியாது.

திரு. எம். சுப்பையா செட்டியார் : மக்கள் சுமக்கக்கூடிய அளவுக்கு வரி போடுங்கள் என்றுதான் சுதந்திராக் கட்சிக் காரர்கள் சொல்கிறார்களே தவிர வரியே கூடாது என்று சொல்ல வில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வளவு தூரம் சுமக்க முடியும் என்பதுதான் இப்போது பிரச்னை. இப்போது வரிபோட அவசியமில்லாததால் போடவில்லை. போடுவதற்கு வழியில்லாத தால் போடவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள், இவர்கள் எங்கே வரி போடுவது, எல்லா வரிகளையும் மத்திய அரசாங்கம் போட்டு விட்டார்களே என்று நான் ஏதோ தயங்குகிறமாதிரி நினைத்துக் கொண்டு சொன்னார்கள். எனக்கு ஒன்றும் தயக்கமில்லை. கவலையு மில்லை, மக்களைப் பற்றிய கவலையைத் தவிர. வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதிலும் கவலையில்லை. ஆனால் விமர்சனத்தை வரவேற்கிறேன். குறைகளைச் சொல்வதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது அதிக செலவான போதிலும் திட்டம் நிறைவேற்றுவதைப் பற்றி ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டிய விகிதாசாரத்தைக் கூட பூராவும் கொடுக்க முடியவில்லை. 4 கோடி ரூபாய் குறை கிறது. அதை நாங்கள் பொருட்படுத்தாமல் 100-க்கு 58 வீதம்

9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதை இழந்து விட்டோம் என்று சொல்ல முடியாது. பின்னால் கணக்குப் பார்த்தால் எல்லாம் சரியாக வந்து விடும். இந்தத் திட்டத்தில் 450 கோடி கொடுப்பதில் இந்த ஆண்டு 50 கோடி குறைத்துக் கொள்ளுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னால் எல்லாம் சரிப்பட்டு விடும். அப்படி இருந்தாலும் இந்தத் திட்டத்தைக் குறைக்காமல் இந்த ஆண்டு நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். நிறைவேற்றுவது எப்படி என்றால் அவர்கள் விற்பனைவரி, Inter-state Sales Tax போடுகிறார்கள். அதை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். அந்த வரி நமக்கு வருகிறது. போடுவது மத்திய அரசாங்கம், வருவது நமக்கு. கொடுக்கிறவர்கள் வேறு மாநிலத்தில் உள்ளவர்கள். அதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. எம். சுப்பையா செட்டியார்: நாமும் தானே கொடுக்கிறோம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாம் கொடுப்பது அங்கே போகிறது. அங்கே கொடுப்பது இங்கே வரும். எங்கே அதிகமான வியாபாரம் என்றால் பம்பாய், வங்காளம் போன்ற ராஜ்யங்களில்தான். நம்மைவிட அங்கேதான் அதிகம். ஆகையால் அந்த Inter State Sales Tax-ஐ அதிகப்படுத்தலாம் என்று நாங்கள் கூட சொன்னோம். அவர்கள் அப்படி வசூலித்தால் நமக்கு வருகிறது. அது ஓரளவுக்கு நம்முடைய (Deficit) பற்றுக் குறையை நீக்கிவிடும் என்று நினைக்கிறேன். ஒரு சில யோசனைகளை அவர்கள் கையாளுகிறார்கள். ஆகவே இந்த பட்ஜெட்டில் இருக்கிற Deficit-ஐ நாம் சமாளித்து விடலாம் என்றுதான் வைத்திருக்கிறோம். ஆனால் Deficit ஏது, Surplus தானே என்று கூட சொல்வார்கள். Surplus என்றால் Surplus என்றே வைத்துக்கொள்ளுங்கள். அது அவரவர்களுடைய இஷ்டம், அதை நாம் எப்படி ஆட்சேபிப்பது? Deficit Budget கொடுத்தேன் என்றால் இதில் மாயாஜாலம் இல்லை. கணக்கு இருக்கிறது. இப்போது ஏதாவது புதிய வரி போடுவதாக இருந்தாலும், கனம் அங்கத்தினர் பாலசுப்பிரமணிய அய்யர் முன்பெல்லாம் சொல்வதுபோல Deficit ஆகக் காட்டி Surplus ஆக காட்டப் போகிறேன் எனலாம். வரி போடுவதற்கு சாக்கு என்று சொல்லலாம். இப்போது நான் புதிய வரியே போடவில்லையே, எதற்காக நான் பொய்க்கணக்கு கொடுத்து பட்ஜெட் ஜாலம் காட்டி Deficit காண்பிக்கவேண்டும்? Deficit இருக்கிறது. அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நமக்கு மத்திய சர்க்காரிலிருந்து வரும்.

4-20 p.m.

கனம் அங்கத்தினர் க. அன்பழகன் குறிப்பிட்டது எல்லாம் வரிகளையெல்லாம் மத்திய அரசாங்கத்தில் போட்டுவிட்டார்கள், அவர்கள் சொல்லுகிறபடிதான் நாம் செய்கிறோம். எல்லாம்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1963

அவர்கள் கையிலே கொடுத்துவிட்டோம். நம் கையிலே ஒன்றும் இல்லை என்று சொல்கிறார்கள். எந்த Federal State-லும் State and Central இருக்கின்றன. எந்த நாட்டிலும் சரி வரிகள் இரண்டு விதமாக இருக்கும். இரண்டு விதமாக இருந்தாலும் State-க்கு இந்த இந்த வரிகள் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றும் மத்திய அரசாங்கத்திற்கு இன்ன இன்ன வரிகள் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றும் விடுவதில்லை. State-க்குச் சில வரிகள், மத்திய அரசாங்கத்திற்கு சில வரிகள். ஆனால் அதிலிருந்து மாநிலங்களுக்கு ஒரு share கொடுக்கிறார்கள். அதோடு Ad hoc grant (மான்யம்) கொடுக்கிறார்கள். நம் நாட்டில் மட்டுமல்ல, இது எந்த நாட்டிலும் உள்ளது. அது சரியாக வருகிறதா இல்லையா என்று 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை Constitution படி Finance Commission போட்டு பரிசிலனை செய்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கும் செல்கிறார்கள் கடைசியில் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். முதல் Finance Commission-ல் நமக்கு 50 சதவிகிதம்தான் வந்தது. வரிகளில் அதற்கப்புறம் இரண்டாவது Finance Commission-ல் 60 சதவிகிதம் ஆகியது. 3-வது Commission-ல் 66-2/3 சதவிகிதம் ஆகியது. அப்படியெல்லாம் பார்க்கிறார்கள். அவர்கள்தான் 3 கோடி ரூபாய் Ad hoc grant கொடுக்கச் சொன்னார்கள். Income-tax பற்றி கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். Income-tax என்று பார்த்தால் நம்மை விட பம்பாய், வங்காளம், குஜராத் ஆகிய ராஜ்யங்களிலிருந்து அதிகமான Income-tax வருகிறது. எப்படி அது பகிர்ந்து கொடுக்கப்படுகிறது என்றால், கடைசியாக இப்போது இருக்கிற நடைமுறையில் Third Finance Commission படி Collection-ல் 20 சதவிகிதம் கொடுக்கிறார்கள். 100-க்கு 80 பங்கு ஜனத்தொகைப் படி கொடுக்கிறார்கள். ஆகையால் நமக்கு அதிகமாக வருகிறது. நாமே Income-tax போடுவதாக இருந்தால், இவ்வளவு வராது. Excise வரியும் அப்படித்தான். நாம் போடுவது என்றால் இவ்வளவு வராது. அந்த அந்த மாநிலத்திற்கு உள்ளதை அப்படியே கொடுக்க வேண்டும் என்றால் பம்பாய்க்கும் வங்காளத்துக்கும்தான் அதிகமாகக் கிடைக்கும்.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் வசூலித்து நமக்குத் தருவதால், அதிகம் வருகிறது என்ற முறையில் கணக்கிட்டுச் சொல்லுகிறார்கள். அதேபோல் மாகாணத்தில் நாம் வசூல் செய்து அதில் மத்திய அரசுக்கு Share தருகிற நிலைமை இருந்தால் அது ஏற்றம் உடையதாக இருக்காதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாம் ஏன் தரவேண்டும். Income-tax இருந்தால் நாம் ஏன் தரவேண்டும். முன்னே எல்லாம் சிற்றரசர்கள் கப்பம் கட்டுவார்கள். அது மாதிரி நாம் ஏன் கட்ட வேண்டும். அவர்கள் போடுவதை அவர்களே வைத்துக் கொள்ள வேண்டும். அது நமக்கு அனுகூலத்தைத் தரும்.

திரு. க. அன்பழகன் : Income-tax evasion குறையாதா ?

9th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வரி போடுவதைப் பற்றி அதிக வரி என்று சொன்னார்கள். கனம் சுப்பையா செட்டியார் அவர்கள் ரொம்பவும் உருக்கமாகச் சொன்னார்கள். வரி என்றாலே சுதந்திரா கட்சிக்கு **allergy** ; வியாபாரிகளுக்கும் **allergy**.

திரு. எம். சுப்பையா செட்டியார் : நாங்கள் வரியே போடாதீர்கள் என்று சொல்லவில்லை. தாங்கக்கூடிய அளவுக்குத் தான் போடவேண்டும் என்கிறோம். வியாபாரிகளும் வரி கொடுப்பவர்கள்தான். ஒவ்வொரு சமயம் எந்தெந்த வரி எவ்வளவு எவ்வளவு கொடுக்கிறோம் என்று கூட புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வரி இல்லாமல் மக்களுக்கு நாம் வசதிகளைச் செய்ய முடியாது. வரி இல்லாமல் நாம்கூட அதிகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு போகலாம். அதற்காகவா சுதந்திரத்திற்காக பாடுபட்டோம். மக்களெல்லாம் இன்புற்று வாழவேண்டுமென்று பாடுபட்டோம். அதற்காக ஆட்சி நடத்துகிறோம் என்றால், கனம் அங்கத்தினரின் கட்சியான சுதந்திரா கட்சியின் பாராட்டுதலைப் பெற்று வரியே வேண்டாமென்று நாம் ஆட்சி நடத்தலாம். அப்படிப்பட்ட ஆட்சி நடத்த நாங்கள் தயாராக இல்லை. ஜனங்களுக்கு சௌகர்யம் செய்யவேண்டுமென்றால் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால் வரி உயரும். எந்த நாட்டிலில்லை? நான் கணக்குப் பார்த்தேன். இங்கிலாந்தில் **U.K.** -ல் 1914-ல் முதல் யுத்தம் வருவதற்கு முன்பு **National income** -ல் 100-க்கு 10 வீதம்தான் வரி போட்டார்கள். ரொம்ப நாளைக்கு முன்னே இல்லை, 1914-ல். இப்போது அவர்கள் போடுவது 30 சதவிகிதம். அமெரிக்காவில் **State and Centre** எல்லாம் சேர்த்து **National income**- ல் 31 சதவிகிதம் ஆகிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் வேறு நம்முடைய வாழ்க்கைத் தரம் வேறு. ஆனாலும் நமக்கும் அவர்களுக்கும் **National income** இருக்கிறது. அமெரிக்காவின் **National income** லிருந்து 31 சதவிகிதம் வரியாக வாங்கப்படுகிறது. பெரிய நெருக்கடி நிலைமை ஒன்றும் இல்லை. கொடுக்கிறார்கள். இங்கிலாந்தில் 30 சதவிகிதம் கொடுக்கிறார்கள். நம் வரி என்ன? மத்திய ஆட்சி இந்த பட்ஜெட்டில் போட்ட வரியும் சேர்த்து நம் மாநிலத்தில் போடும் வரியும் சேர்த்துப் பார்த்தால் எல்லாம் 13 சதவிகிதத்திற்குதான் வருகிறது, நம் **National income** -ல் நமக்கு **National income** எவ்வளவு என்று கணக்கு இருக்கிறது. போன வருஷம் எவ்வளவு இந்த வருஷம் எவ்வளவு என்று கணக்கு இருக்கிறது. இந்த வருஷத்தில் 2.2 தான் இருக்கிறது. அந்த **National income** படி நம் மாநிலத்தில் போடப்படுகிற வரி, மத்திய ஆட்சியில் போடப் படுகிற வரி எல்லாம் சேர்த்து பார்த்தால் 13 சதவிகிதம்தான். இங்கிலாந்தில் 30 சதவிகிதம், அமெரிக்காவில் 31 சதவிகிதம். மற்ற நாடுகளில் 25, 29, 19 18 28 என்று எல்லாம் கூட இருக்கின்றது. ஆனால் 13 சதவிகிதத்திற்கு கீழே எங்கேயும் இல்லை. நம் நாட்டிலேதான் பார்க்கிறோம். நான்

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1963

Central and State tax களை கணக்கு போட்டு சொல்கிறேன். எப்படி 13 சதவிகிதம் ஆயிற்று. புதிய வரிகள். Emergency -ல் போட்டிருக்கிறோம். அதைக் கழித்துப் பார்த்தால் 11½ சதவிகிதம், அதுவரைக்கும் போட்டது அவ்வளவுதான். Emergency -ல் நாட்டைப் பாதுகாக்க என்று 1½ சதவிகிதம் கொடுக்கக்கூடாதா? அதைக்கூட, கொடுக்கக்கூடாது என்றால் என்ன தான் பாதுகாப்பு? என்ன தியாகம்? அதைத்தான் கவனிக்க வேண்டும். அதற்காக தாங்க முடியாதவர்கள் மீது வரி போட வேண்டுமென்று சொல்லமாட்டேன். இது அரசாங்கத்தின் கொள்கையும் அல்ல. தாங்கக் கூடியவர்களைத்தான் கேட்கிறோம். எத்தனை பேர் பணக்காரர்கள்? பணக்காரர்களை விரல் விட்டு எண்ணலாமே. பணக்காரர்களுக்கு மாத்திரம் போட்டால் அது எவ்வளவு மூலைக்கு? பணக்காரர்கள் என்றால் தாங்கக்கூடியவர்களுக்குத்தான் போடலாம். போட்டுக்கொண்டுதான் இருக்கிறோம்.

ஏழைகள் பாதிக்கப்படுகின்றார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நாம் பெரும்பாலும் ஏழைகள்தானே, நடுத்தர வகுப்புகள்தானே. இவர்களும் கொடுக்காவிட்டால் அப்புறம் வரி ஏது? அப்புறம் எதை வைத்துக்கொண்டு ஆட்சி செலுத்துவது? நாட்டை எப்படிப் பாதுகாப்பது? எப்படி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவது? ஆகவே இப்பொழுது போட்டிருக்கிற வரி எல்லோரும் தாங்கக் கூடியதாகத்தான் போட்டிருக்கிறோம்.

மத்திய ஆட்சியில் கிரோஸினுக்குக்கூட வரி என்று சொன்னார்கள். இந்த கிரோஸினில் 30 கோடி, 40 கோடி அன்னிய செலவாணி ஆகிறது. நம் நாட்டில் உற்பத்தியாவது இல்லை. இங்கு உற்பத்தியானாலும் பரவாயில்லை. அன்னிய நாட்டுச் செலாவணியைக் குறைக்க வேண்டும். இந்த யுத்தத்தை நாம் எப்படிச் சமாளிப்பது? ஓரளவுக்கு நாம் அன்னிய நாட்டுச் செலவாணியைக் குறைக்கவில்லை என்றால், நாம் எப்படி சமாளிப்பது? அதற்காகத்தான் போட்டேன் என்று சொல்லுகிறார் மத்திய நிதி மந்திரி. அப்படிப் போட்டால் என்ன அர்த்தம்? Consumption--ஐக் குறைத்துக் கொள்ள வேண்டும். வரி என்றால் கஷ்டம்தான் கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லுகிறேன். போடுகிறவர்களுக்கும் கஷ்டம். சங்கடமாகக்கூட இருக்கிறது. வேறு வழியில்லாமல் போடுகிறோம். அரசாங்கத்துக்கு மாத்திரம் இது இனிக்கவில்லை. கொடுக்கிறவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறதோ அதே மாதிரி அதைப் போடுகிற அரசாங்கத்துக்கும் இருக்கிறது. இதை உறுதியாகச் சொல்லுகிறேன். ஆனால் வேறு வகையில்லை என்பதால் போடுகிறோம். இது தாங்கக்கூடியவர்கள்
4–30 p.m. மீதிருப்பதால் சகித்துக்கொண்டுதான் கொடுக்க வேண்டும். It must not be killing the goose that lays the golden eggs. அந்த கொள்கையைத்தான் நாங்கள் அனுசரித்துக்கொண்டு வருகிறோம். தவிர்க்கக்கூடாத வகையில் எப்படி சரிக்கட்டுவது? எவ்வளவு செலவு ஆகிறது?

9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

பாதுகாப்பு நிதி வசூல் பற்றிச் சொன்னார்கள். கண்டிப்பு கூடாது என்று சொல்கிறோம். திருப்பி, திருப்பி சொல்லிக் கொண்டு வருகிறோம். சென்ற யுத்தத்தில் கட்டாயப்படுத்தி வசூல் செய்தார்கள். அப்பொழுதுகூட ஏன் வசூல் செய்தார்கள் என்றால் அப்பொழுது பெரும்பான்மை காங்கிரஸ்காரர்கள்தான். இந்த யுத்தத்தில் நாங்கள் சேரவில்லை, அக்கரை இல்லை என்று சொல்லி விட்டோம். அப்பொழுது ஆட்சியாளர்கள் இந்தியாவிலே மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதாக உலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்ற காரணத்தோடு அதிகாரிகள் அப்படி வசூல் செய்தார்கள். அதிகாரிகள் ஓரளவுக்கு வசூல் செய்தால், அவர்கள் நல்ல பெயர் எடுக்கக்கூடிய நிர்ப்பந்தம் இருந்தது. ஆனால் இப்பொழுது வேறு அடிப்படை. இப்பொழுது நிர்ப்பந்த மாக வசூலிக்கவேகூடாது. அதிகாரிகள் அப்படி வசூலிக்கவில்லை. அவர்கள் வசூல், கணக்கு அளிப்பதற்காக இல்லை. வசூலித்த பணத்திற்குச் சரியாகக் கணக்கு வருகிறதா என்று கண்காணிக்க வேண்டும். கண்காணிப்பு வைத்துக் கொள்ளுவதற்கும், அதை வாங்கி, பாங்கி, டிரெஷரியில் கட்டுவதற்கும், யாரும் தவறுதலாக பயன்படுத்திக் கொள்ளாதவாறு பார்க்கவும்தான் அதிகாரிகளே தவிர வசூலிப்பதற்காக இல்லை. கட்டாயப்படுத்தியதாக இல்லை. அதைத் திருப்பித் திருப்பி நாங்கள் சொல்லிக்கொண்டு வருகிறோம். எங்கேயாவது ஒரு இடத்தில் 1, 2 அதிகாரிகள் உற்சாகம் மிகுதியினால் நாங்கள் வசூலிக்கிறோம் என்று வசூலிக் கலாம். அவர்களுக்கு நாட்டு பாதுகாப்பில் அக்கரை இருக்கிறது. இந்த நாட்டிலிருந்து சீனர்கள் போக வேண்டும் என்ற அக்கரை இருக்கிறது. அவர்களுக்கு உணர்ச்சி, உற்சாகம் இருக்குமா, இல்லையா. அதற்கு யார் தடை போடுவது? அதிகாரிகள் வற்புறுத்தி வசூலிக்க வேண்டாம் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வருகிறோம். மறுபடியும் சொல்லுகிறேன். ஆனால் கூடியவரையில் நடக்கவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும்போது ஏதோ 1, 2 இடங்களில் நான் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தேன். ஒருவேளை நட்டுகெட்டுபோய் நம்முடைய அதிகாரிகள் யாராவது உற்சாக மிகுதியாலே சர்குலர் ஏதாவது அனுப்பி னார்களோ என்று நினைத்துக்கொண்டேன். நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மனதில் முடிவு செய்து கொண்டேன். எப்படி இவர்கள் செய்கிறார்கள். அக்கிரமமாக இருக்கிறதே, இப்படியா சர்க்குலர் விடுகிறது, நமக்குத் தெரியாமல் சர்க்குலர் விட்டு விட்டார்களா என்று நான் உண்மையிலே வருத்தப் பட்டேன். படித்துக் கொண்டே போனார். நம்முடைய நடையிலே அது ஆங்கிலமாக இருந்தாலும் அந்த ஆங்கிலத்தில் ஒரு நடை இருக்கிறது. நாம் படித்திருக்கிற Style ல். எனக்குக் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டது. ஏதோ அச்சிலிருந்து படிக் கிறார்கள் என்று நினைத்தேன். கொஞ்சம் ஆறுதல் வந்தது. அது "சுராஜ்யா" பத்திரிகை. அதில்தான் வந்திருக்கிறது. அதில் பார்த்தேன். இதிலே சில வார்த்தைகள் இருக்கின்றன. இது நம்ப Dictionary -ல் கிடையாது. நம்ப Administration

Dictionary -ல் இல்லாத வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். இவ்வளவு போட்டவர்கள் "எந்த கலெக்டர்" என்று போடுவதானே? யூகத்தைச் சொல்லுகிறார். அது முறையல்ல. வட ஆற்காடு என்று. அது அவதூறு. வட ஆற்காடு என்று சொன்னது அவதூறு. வட ஆற்காடு கலெக்டர் அப்படி ஒன்றும் செய்திருக்கமாட்டார். இதிலே படித்துக்கொண்டு வந்தார்கள்.

"Where ryots do not respond adequately even after the persuasion of the Tahsildar, such cases may be tackled by the R.D.O. In villages where president of the panchayat samiti would influence their help also should be taken in securing good contributions".

"பஞ்சாயத்து சமிதி" என்று இங்கு ஒன்றுமே கிடையாது. தமிழ் நாட்டில், நாம் பஞ்சாயத்து யூனியன் என்று சொல்கிறோம். பஞ்சாயத்து சமிதி என்று சொல்லுவது வேறு. நாம் பஞ்சாயத்து யூனியன் என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோம். தமிழில் சொல்லுவதுகூட பஞ்சாயத்து சமிதி என்று சொல்லுவது கிடையாது. பஞ்சாயத்து சமிதி என்று ஒருக்காலும் நம் தமிழ் நாடு ஆட்சியில் இந்த சர்க்குலர் கொடுத்து இருக்க முடியாது என்று எனக்குத் தெரிகிறது. "எந்த கலெக்டர்" என்று கொடுப்பதுதானே.

AN. HON. MEMBER : பஞ்சாயத்து சமிதி என்று மகாராஷ்டிரத்தில் இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர் வட ஆற்காடு என்று ஊகம் சொன்னார். நான் எந்த மாநிலத்தையும் சொல்லவில்லை. அதை நான் சொல்லத் தயாராயில்லை. ஆகையினால் அது மாதிரி ஒன்றுமில்லை.

திரு. எம். சுப்பையா செட்டியார் : தலைவர் அவர்களே, என்னுடைய முக்கிய நோக்கம் எல்லாம் அரசாங்கம் விசாரித்து, இந்த மாதிரி நடக்க இடம் கொடுக்கக்கூடாது என்று நான் முன்னே சொன்னேன். அப்படி அரசாங்கத்துக்கு விசாரிப்பதற்கு வசதி நிறைய இருக்கிறது. இதைப் பூராவாக விசாரித்து உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினரைப் பாராட்டுகிறேன். ஆனால் சில விஷயம் கோர்டிலே அட்மிஷனே பண்ணுவது இல்லை. அது மாதிரி நிராகரிக்க வேண்டிய விஷயம் என்று இதிலே தெரிகிறது. இதை விசாரிப்பதற்கு என்ன இருக்கிறது? இதைப் பார்த்தாலே தெரிகிறதே நம்முடைய மாநிலத்தில் நடைபெற்றதா, இல்லையா என்று. இதை வைத்துக்கொண்டு எதை விசாரிப்பது?

DR. A. CHIDAMBARANATHAN : Tahsildar should be tackled என்று இருக்கிறது. இந்த மாதிரி நம் மாநிலத்தில் போடுவதில்லை.

9th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படி ஒன்றும் நிர்ப்பந்தமாக வசூலிப்பது இல்லே. நான் சொல்ல வந்தது அப்படி எல்லாம் வசூலிப்பது கிடையாது. நம்முடைய பாதுகாப்பு தேவைககு இது எந்த மூலேக்கு? எவ்வளவு அதிகமாக வேண்டியிருக்கிறது? இப்பொழுது வரி போட்டு இருக்கிறூர்களே பாதுகாப்புக்கு 600 கோடி. இதுகூட போதாது. பாதுகாப்பைச் சரியாக நடத்த வேண்டுமென்றுல் இதுகூட போதாது. நாம் இது வரைக்கும் பாதுகாப்புக்குச் செலவு செய்வது அநாவசியம் என்பதால்தான் இந்த நிலேயில் வந்திருக்கிறேம். ஆகையினுல் இப்பொழுது நாம் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக்கொண்ட பாடத்தை மறந்து விட்டால் என்ன செய்வது? பாடத்தைக் கற்றுக்கொண்டு பரீட்சை எழுதியதோடு மறந்து விட்டால், பரீட்சை எழுதிவிட்டால் மறந்துவிடலாம் என்று சில மாணவர்கள் நினேக்கிறூர்கள். இந்தப் பாடம் நாட்டைப் பற்றிய பாடம். சாதாரணமாக ஒரு கதை சொல்லுவார்கள். ரொம்ப வைதிகர் ஒருவர் தேங்காய்த் தோட்டத்தில் திருட்டுப் போய்க் கொண்டிருந்தது. கவலேப்பட்டார்கள். கவலே என்னத்துக்கு தீர்த்தத்தை மந்திரம் சொல்லி புரோட்சித்தால் திருடமாட்டான் என்று சொன்னுர். அந்த மாதிரி நாம் ரொம்ப நல்லவர்கள். எல்லோரும் நல்லவர்கள். நமக்கு யாரும் எதிரி இல்லே என்று நினேத்துக்கொண்டிருந்தோம். இப்போ சீனு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பாடத்தைக் கற்றுக் கொண்ட பிறகு நாம் மறந்து விடலாமா. எப்படியோ பாதுகாப்புக்கு என்னவேண்டுமானுலும் கொடுப்போம், உயிரைக் கொடுப்போம் என்றுல் பணத்தை கொடுக்க வேண்டாமா?

உயிரைக் கொடுப்பதற்குத் தயங்கவில்லே என்றுல் வரி அதிகமாகப் போட்டுவிட்டார்கள், கிரசின் ஆயில் இல்லே, கோல்டு இல்லே என்று குறைப்பட்டால் என்ன அர்த்தம்? தங்கக் கட்டுப்பாடு வந்தது. தங்கத்தில் ஸ்மக்ளிங் அதிகமாக ஆகிறது. அன்னிய நாட்டுச் செலவாணியை அது பாதிக்கிறது. அதைத் தடுப்பதற்கு வேறு என்ன வழியிருக்கிறது? நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம் பணக்காரர்களுக்கு வருத்தமாக இருக்கலாம். பாதுகாப்பை யொட்டித்தானே எல்லாம். இப்போது மத்திய நிதியமைச்சர் அவர்கள் நம்முடைய முதல் மந்திரி அவர்களுக்கு எழுதிய கடிதம் நேற்று வந்தது. பார்த்தேன். அவர்கள் அனுதாபத்துடன் தான் இருக்கிறூர்கள். அலட்சியமாக இல்லே. பொற்கொல்லர்களுக் கெல்லாம் வேலே கொடுக்கும் விஷயத்தில் கடன் கொடுப்பதாக எழுதியிருக்கிறூர்கள். அவர்கள் 14 காரட்டில் எல்லா நகைகளேயும் செய்வதாக இருந்தால் அதைச் செய்யலாம் என்று விளக்கியிருக்கிறூர்கள். பொற்கொல்லர்களிடத்தில் அனுதாபம் இல்லேயா என்ன? அவர்கள் இந்தத் தொழிலே நம்பியிருக்கிறவர்கள். வேறு தொழிலுக்குப் போகமுடியாதவர்கள். ஆனுல் இப்போது வேறு தொழிலுக்குப் போகிறேம் என்று சொல்கிறூர்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிற்கு இதுபற்றி உத்தரவு போட்டிருக்கிறேம். **First preference** முதல் சலுகை அவர்களுக்குக் கொடுக்க

வேண்டுமென்று உத்தரவு அனுப்பியிருக்கிறோம். வேறு வேலைக்குத் தகுதியானவர்களுக்கு சில பேருக்கு வேலைகூட கொடுத்திருக்கிறார்கள். தகுதியானவர்களா என்றும் பார்க்கவேண்டியிருக்கிறது. அவர்களுடைய நிலை எவ்வளவு அனுதாபத்தோடு கவனிக்கப்படவேண்டுமோ எவ்வளவு நிவாரணம் அளிக்க வேண்டுமோ அவைகளைச் செய்துவருகிறோம்.

4-40 p.m. **திரு. க. அன்பழகன்:** அமைச்சர் அவர்கள் பொற்கொல்லர்களுக்கு வேலை அளிக்கப்படுகிறதென்று தெரிவித்தார்கள். பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அதிக அளவில் குறிப்பிட்ட தொழிற் சாலைகளில் வேலை கிடைக்கும்வரை மாவட்டக் கலெக்டர்கள் மூலம் இவர்கள் பட்டினியில்லாமல் இருக்க சென்னை நகரத்தில் சிலர் அளித்ததைப் போன்று அரிசி முதலியவை தருவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தகுதியான வேலை கொடுப்பது கஷ்டம். அவர்களுக்கு எந்த வேலை கொடுத்தாலும் சரியில்லை. அவர்கள் நைசான வேலைகளைச் செய்பவர்கள். அவர்களைச் சேர்த்து இண்டஸ்ட்ரீஸ் கோவாப்பரேடிவ் வைத்து இதே வேலையைக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நிவாரணம் கொடுக்கும் விஷயம் அந்தந்தப் பிராந்தியத்திற்கேற்றவாறு கவனிக்கப்படும்.

வரி அதிகமாகப் போட்டால் பாதிக்கப்படுபவர்கள் மத்திய வகுப்பினர் என்று சொல்லுகிறார்கள். இருக்கலாம். ஆனால் கூடியவரைக்கும் அதிகமாக பாரத்தைச் சுமத்தாமல் பகிர்ந்து எப்படிக் கொடுக்க முடியுமோ அப்படித்தான் கொடுக்கப்படுகிறது. அப்படிப் போடும்போது அவை கவனிக்கப்பட்டு வருகிறதா என்று பல அங்கத்தினர்கள் கேட்டார்கள். இந்த மாநிலத்தைப் பொருத்தவரையில் சொல்கிறேன், நல்ல முறையில் அவை பயன்படுத்தப்படுகின்றன. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஏதாவது சிக்கனம் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்புகூட ஒரு ஜில்லா ஜட்ஜைக் குறைத்தோம். இரண்டு ஜில்லா ஜட்ஜுகள் இரண்டு வேலைக்காக இருந்தார்கள். **State Transport Tribunal, Tribunal for disciplinary proceedings** என்று பல ஆண்டுகளாக இருந்தவை அவை. இரண்டையும் சேர்த்து ஒருவரிடம் கொடுத்தால் என்னவென்று இப்போது செய்திருக்கிறது. இவை பெரிய உத்தியோகமானதால் அப்படிச் செய்ய முடிந்தது. சிறிய உத்தியோகத்தைக் குறைத்தால், வேலை அதிகமாகிவிடும் அவர்களுக்கு. அவையெல்லாம் கவனிக்கப்பட்டுத்தான் வருகின்றன. வரி போடவில்லை என்றால், அது திருப்தியளிக்குமா என்று டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எவ்வளவு திருப்திப் படுத்தமுடியுமோ அவ்வளவுதான் செய்திருக்கிறோம். இன்னும் அதிகமாகத் திருப்திப் படுத்த நாம் என்ன செய்ய வேண்டுமென்று கவனிக்கவேண்டும்.

9th March 1963]

டாக்டர் அ. சிதம்பரநாதன் : முழு திருப்தியளிக்கவில்லை, ஓரளவு திருப்தி அளிக்கிறது என்பதைத்தான் தெரிவித்தேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எப்போதும் முழு திருப்தியே கூடாது. கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கவேண்டும். ஆகையால் அனுவசியாக ஒன்றும் இல்லை. திரு. அன்பழகன் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்றார். எந்தக் கிராமத்திற்குப் போனாலும் கேட்கக்கூட வேண்டியதில்லை, பார்த்தாலே தெரியவில்லையா ? பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு திருவிழாக்களில் கூட்டங்களில் பார்த்தால் அப்போது மக்கள் எப்படியிருந்தார்கள், இப்போது எப்படியிருக்கிறார்கள் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். நமக்கு தெரியாவிட்டாலும்கூட கிராமமக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதோடு நாம் திருப்தியடைந்துவிட முடியாது. நாம் இன்னும் வளர வேண்டும், உயர வேண்டுமென்று தான் கவனம் செலுத்தவேண்டும்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட ஒன்றிரண்டு விஷயத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக அவர்கள் வைத்திய இலாகாவைப் பற்றியும் சுகாதாரத்தைப் பற்றியும் எப்போம் நமக்கு சீரிய யோசனைகள் சொல்வதுண்டு. அதே முறையில் இப்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிநீர் விநியோக விஷயம் இருக்கிறது. குடிநீரை எப்படிக் கொண்டுவருவது என்பதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். 400 மைல் வர வேண்டும். கிருஷ்ணா நதியிலிருந்து வருவதற்கு 400 மைல் ஆகிறது. 200 மைலில் கடப்பா-கர்நூல் கெனால் வருகிறது. அது இன்னும் முடிவாக வில்லை. காவேரியைப் பற்றி சொன்னார்கள். காவேரியைப் பற்றி யோசிக்கும்போது அது அதிகச் செலவாகிறது. தோராயமாகத்தான் கணக்கு போடப்பட்டது. டோட்டலில் நஷ்டமல்ல. அது கிராவிடேஷன் அல்ல. இதற்கு 40 கோடி ரூபாயில் திட்டம் உருவாக்கப்பட்டால், அதற்கு 25 கோடி ரூபாய் ஆகிறது. இது பம்பிங். அது கிராவிடேஷன். அதுதான் வித்தியாசம். ஏற்கனவே 200 மைல் கே சி. கெனால் இருக்கிறது. அதையொட்டித்தான் வரவேண்டும். அவர்களே லைன் பண்ணுவதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களே லைன் பண்ணிவிடுவார்கள் என்று நினைக்கிறேன். பெண்ணாறிலிருந்து பூண்டிக்கு வர வேண்டும். தண்ணீர் எவாப்பரேஷன் ஆகாமல் தடுக்கப்பட வேண்டியது அவசியம். அதைக் கவனிக்கவேண்டும்.

முக்கியமாக போஸ்ட் கிராஜுவேட் மெடிகல் கொலேஜில் அதற்குத் தனியாக கோடம்பாக்கம் புதூர் கிராமத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் சில ஸ்பெஷல் கோர்ஸ் எல்லாம் சேர்த்து மெடிகலில் போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸ் சேர்த்து சீக்கிரம் தொடங்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித்துறையைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய கருத்தை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். மாநிலத்தில் முன்பு டயார்க்கி ஆட்சியிருந்தது. கல்வியைப் பொருத்தவரையில் நீண்ட காலமாக பழைய டயார்க்கி இருந்த காலத்தில்,

டிரான்ஸ்ஃபர்டு சப்ஜெக்ட், ரிசர்வ் சப்ஜெக்ட் என்றிருந்தது. அப்போதே கல்வியை டிரான்ஸ்ஃபர்டு சப்ஜெக்டாக வைத்திருந் தார்கள். அப்படி யிருந்த காலத்தில் ஃபார்ஸ்ட் ரிசர்வ் என்றும் வைத்திருந்தார்கள். அதிகமாக வெள்ளைக்காரர்கள் இருந்த இடத் தில் ரிசர்வ் என்று வைத்திருக்கிறார்கள். முக்கியமாக ஹோம், ஃபைனான்ஸ், லா இவையெல்லாம் இருந்தன. 1920-லிருந்துதான் டயார்க்கி ஆரம்பித்தது. மான்டேகு செம்ஸ்போர்டு ரீஃபார்ம் வந்தது. அப்போதே டிரான்ஸ்ஃபர்டு சப்ஜெக்டாக இருந்தது. அப்போதுதான் கல்வி மந்திரி அதைக் கவனித்து வந்தார்கள். இப்போதுள்ள கான்ஸ்டிடியூஷனில் கல்வி ஸ்டேட் சப்ஜெக்டாகப் போய்விட்டது. இப்போதுபோய் அதை கன்கரண்ட் என்று போட அவசியமில்லை. போடுவது முறையுமல்ல என்பது இந்த அரசாங்கத்தினுடைய அபிப்பிராயம். நம்மைக் கேட்காமல் போட முடியாது. அரசாங்கம் அதை ஒப்புக்கொள்ளவில்லை. கன்கரண்ட் ஆக எதற்குப் போடவேண்டும்? கல்வித் துறையிலே துண்டு துண்டாக தனித்தனியாக மாநிலங்கள் இஷ்டப்படி செய்வது முறையல்ல.

சென்ற கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில்கூட நான் குறிப்பிட் டேன். வேறு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அதில் சொல்லி வந்தார்கள். நான் சொன்னேன் Co-ordination வேண்டு மென்றால் State Education Ministers Conference, Central Board of Education, Inter University Board என்று இவைகளை அவ்வப்போது கலந்து ஆலோசித்து கூடிய வரை ஒரு Uniform Policy -ஐ உருவாக்க லாம். ஒவ்வொரு detail -க்கும் போகக் கூடாது. பொதுவாக out line -ஐ மட்டும் சொல்லலாம் என்று சொன்னேன். அதே மாதிரி All-India Services, I.E.S. இருந்தது. அது ஒன்றும் திருப்தி கரமாக இல்லை. அது எடுபட்டுவிட்டது. அப்போது Engineering Service இருந்தது. இப்போதும் நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம். நாங்கள் ஒப்புக் கொள்ளாமல் புதிதாக All-India Service-ல் எதையும் சேர்க்க முடியாது. நாங்கள் ஒப்புக் கொண்டதை தான் அவர்கள் சேர்க்க முடியும். இப்போது Engineering, Public Health, Forests இவைகளை All-India Service-ல் வைக்கலாம் என்று கேட்டார்கள். எங்களுக்கும் சரி என்று பட்டது. அதற்கு தமிழ் நாடு, ஆந்திரா, கேரளம் மைசூர் எல்லாம் கூட பேசும்போது சரி நடத்துங்கள் என்று உடன்பட்டோம். Agriculture-ஐச் சொன்னார்கள். முடியாது என்றோம். அதே போல Education என்றால் இந்த அரசாங்கம் ஒப்புக் கொள்வ தாய் இல்லை. அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதே மாதிரி Higher Education அதிலும் தலையிட வேண்டு மென்றால் ஒப்புக் கொள்ள மாட்டோம். அதிலே கனம் எதிர்க் கட்சித் தலைவரின் கருத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்ளுகிறேன். பொதுவாக
4-50 p.m. Inter University Board-ல் discussion செய்கிற போது மாநில மத்திய அமைச்சர்கள் கலந்து பேசலாம். Concurrent list-ல் இருந்தால்கூட நான் வற்புறுத்துவேன். மாநிலத்தைப் பொறுத்த மட்டில் கல்வித் துறையில் தலையீடு கூடாது. பொதுவாக யோசனை சொல்லலாம் கலந்து பேசலாம் என்றுதான் சொன்னேன்.

9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

அடுத்து மும்மொழிக் கொள்கை three Language Formula அதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட கருத்து இருக்கிறது. அதன்படி சில திட்டங்களை வகுத்திருக்கிறோம். அதை அதிகம் நாம் மாற்றுவது என்றால் இந்த மாநிலத்தின் நிலைமையை கவனித்துத்தான் மாற்ற வேண்டும். அவசரப்பட்டு மாற்ற ஒப்புக் கொள்ள மாட்டேன். 3 மொழிகள் கற்க வேண்டியது அவசியம் என்று உணருகிறேன். தமிழ் முதலானது. ஆங்கிலம் 2-வது. 3-வது இந்தி. இந்தி படிப்பது நல்லது. சௌகர்யமானது. இதை நிர்பந்திப்பது சரியல்ல. நிர்பந்தப் படுத்தினால் அதற்கு வேறு reaction இப்போதே நிர்பந்தமில்லாமல் 50,000 பேர் இந்தி படிக்கிறார்கள். ஆனால் ஒன்று. இதிலும் சில பேர் சமஸ்கிருதம் படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். வெளி நாடுகளில் உள்ளவர்கள் எல்லாம்கூட இதைப் படிக்கிறார்கள். ஆகவே இது முக்கியம் என்றுதான் நான் கருதுகிறேன். இல்லையென்றால் அந்த இன்பத்தின் பொக்கிஷத்தை எவ்வாறு அனுபவிக்க முடியும். அதைக்கூட வற்புறுத்தக் கூடாது. ஆனால் இரண்டும் போட்டி ருப்பதால் இந்திக்காரர்களுக்குத் திருப்தி இல்லை. சமஸ்கிருதக் காரர்களுக்கும் திருப்தி இல்லை. ஏனென்றால் இரண்டையும் போட்டி போட வைத்து விட்டார்கள். ஒன்றுக் கொன்று போட்டியாக வைத்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். நான் இதை முடிவாக யோசனை செய்யவில்லை. இந்தியே போட்டுவிடலாம். பரிட்சையில் இவ்வளவு மார்க்கு வாங்க வேண்டும் என்று நிர்பந்தம் வேண்டாம். பரிட்சை வேண்டும் என்பவர்களுக்கு பரிட்சை வைக்கலாம். இதற்கு Hindi Pandit கள் மாநாடு போட்டு அவர்கள் Dictation செய்கிறார்கள். எத்தனை Dictation ? கீழே இருந்து மேலே இருந்து Dictation. Hindi Pandit- கள் பயப்படவேண்டியதில்லை. வகுப்பு கட்டாயம் உண்டு. அதோடு விட்டு விடலாம். படிக்க வில்லை என்றால் நாம் வற்புறுத்தக்கூடாது. பரிட்சைக்கு போகிறோம் என்று சொல்கிறவர்களுக்குக் குறைந்த பட்சம் மார்க்கு வைத்து பரிட்சை வைக்கலாம். பரிட்சைக்கு வேண்டியவர்கள் வரலாம். சமஸ்கிருதத்தை இந்தியோடு பிணைக்காமல் வேறு optional ஆக வைக்கலாம் இல்லை என்றால் எல்லா பாடங்களையும் படிக்க வேண்டும். தமிழ் ஆங்கிலம் இந்தி படிக்க வேண்டும். அல்லது 4-வது சமஸ்கிருதம் அல்லது தெலுங்கு அல்லது வேறு ஒரு பாடத்திற்கு பதிலாக சமஸ்கிருதத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய thinking கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாசவரதன் அவர்கள் கல்வித்துறையில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளுகிறவர்கள். அவர்கள் வற்புறுத்துவது எப்போதுமே Quality and quantity கட்டாயம் வேண்டும். ஆனால் Quality என்று சொல்லி Model School 10 ஸ்கூல் வைத்துக்கொண்டு மற்றதையெல்லாம் பார்த்துக் கொள்ளலாம் என்று வைக்க முடியாது. எல்லோரும் படிக்க வேண்டும். உயர்ந்த படிப்பு படிக்கவேண்டும். இப்போது படிப்பது குறைந்தபட்ச படிப்பு. பள்ளிக்கூடங்கள் 1,500 இருக்கின்றன. இவைகளுக்கு விஞ்ஞானம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள் தேவை. இதற்கு Laboratory-கள் தேவை. இவைகளைக் கூடிய

[திரு. எம். பக்தவத்சலம்] [9th March 1963

விரைவில் கவனிப்போம். குறைகளைத் திருத்தி நல்ல முறையில் படிப்பு நடைபெற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் செய்து வருகிறோம்.

கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் சில தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஏதோ மத்திய அரசாங்கம் தலையீடு குறுக்கீடு என்று நினைக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுடைய கற்பனை.

திரு. க. அன்பழகன் : லைசென்ஸ் கிடைக்கவில்லை என்று நீங்களே அறிக்கையில் சொல்லி இருக்கிறீர்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாங்கள் கேட்டு அவர்கள் மறுக்கவில்லை. இப்போது **Re-rolling Mills** இருக்கிறது. அதற்கு நாம் திட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்கு பதிலாக **Continuous Casting Mills** வைக்கலாம் என்கிறார்கள். இதெல்லாம் **Technical issues** எனக்கும் இங்கு கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் இது தெரியாது. இதை நல்ல முறையில் நடத்த வேண்டும். சும்மா **Inauguration** மட்டும் செய்துவிட்டால் போதாது. **Expert** களை உள்நாட்டிலும் கேட்கவேண்டும், வெளிநாட்டு **Expert**-களைக் கூட கேட்கவேண்டும். இப்போது ஒருவரைப் பிடித்துக் கேட்டிருக்கிறோம். அவர் என்னசொல்லுகிறார் என்றால் **Re-rolling**-க்கு பதிலாக **Continuous Casting Mill** வைக்கலாம் என்கிறார். இதையெல்லாம் பரிசீலனை செய்துதானே எதையும் செய்ய முடியும்.

இப்போது விற்பனை வரி பற்றி தொல்லைகள் இருக்கின்றன என்கிறார்கள். நான் அதிகாரிகளைப் பார்க்கிற போதெல்லாம் வற்புறுத்திக் கொண்டிருப்பது **harassment** கூடாது என்பது தான். விற்பனை வரி கொடுப்பவர்களான வியாபாரிகளுக்கு உட்கார இடம், நாற்காலி, மேஜை, சோபா எல்லாம் கொடுத்து அவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருக்கவேண்டும், **harassment** தவிர்க்கப்படவேண்டும். நான் அவ்வப்போது அதை வற்புறுத்துகிறேன். கூடியவரை அனுசரிக்கப்பட்டு வருகிறது. மதிப்புக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் விற்பனை வரியால் ~~ரூ~~ 30 கோடி ரூபாய் வரும் என்று சொன்னார்கள். எனக்குத் தெரியவில்லை. அவர்கள் அனுபவம் உள்ளவர்கள். கூடிய வரையில் நான் ஒரு விஷயத்தைச் சொன்னேன். இதை ஒப்பிட்டு சொல்லவில்லை. நம் மாநில விற்பனை வரியைப் பொறுத்தவரை அதிக **Evasion** இல்லை, அதற்குக் காரணம் **harassment** இல்லை. நல்ல முறையில் நடத்தச்சொல்லி இருக்கிறோம்.

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் : **Harassment** என்றால் உட்கார வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. வரிப் பணம் நிறைய வாங்கினாலே அது போதும்.

கனம் திரு. எம். பக்தவச்சலம் : இன்னொரு விஷயம் **Compulsory Savings**. சர்க்காரில் உத்தியோகம் செய்பவர்களைக் கூப்பிட்டுக் கேட்டேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு கேட்டேன். இப்

9th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

போதும் Provident Fund கட்டுகிறார்கள், நாமும் Contribute பண்ணுகிறோம். நீங்கள் Provident Fund கட்டுகிறீர்கள். இந்த நெருக்கடி நிலையை ஒட்டி ஒரு 5 சதவிகிதம் அதிகமாக கொடுக்கிறீர்களா என்று கேட்டேன். நான் ரொம்பவும் தயக்கத்தோடு தான் கேட்டேன். ஆனால் அவர்கள் தயங்காமல் சரி என்றார்கள். நாங்களும் அப்புறம் பேசியதில் எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். ரூ. 100-க்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே 6 சதவிகிதம் P.F. கட்டுகிறார்கள். இந்த 100 ரூபாய் குறைவாக இருக்கிறவர்களுக்கு 3 சதவிகிதம் Compulsory Savings கொடுக்கலாமா என்று கேட்டோம். அதற்கு ஆட்சேபணை உண்டா என்று கேட்டோம். அதோடு அவர்களை கூப்பிட்டு, போலீஸ் கான்ஸ்டபிளை கூட கேட்டோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் உங்களுக்கு என்ன அபிப்பிராயம் என்று கேட்டோம். கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் Save பண்ணினால் நல்லது என்று சொன்னோம். தொழிலாளர்களை கேட்டோம். அவர்கள் தொழில் போனஸில் ஒரு பங்கை எடுத்துக் கொள்ளுங்கள் அதற்கு ஒரு சட்டம் செய்து விடுங்கள் என்று சொன்னார்கள். இந்த நெருக்கடி நிலையில் நாம் செய்யவேண்டிய கடமை என்ன? நாம் ஓரளவு சிக்கனத்தை கையாளவேண்டும். வாங்குவதைக் குறைக்க வேண்டும். நெருக்கடி நிலைமை ஆனதால் இப்பொழுது உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். பல தொழிற்சாலைகளைப் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். நெருக்கடி நிலைமை அதிகமாக போனால் எப்படி சரிக்கட்டுவது? நாம் பொருள்களை வாங்குவதைக் குறைத்தாக வேண்டும். சேமித்தால் ஐந்து ஆண்டுகள் கழித்து வட்டியோடு கொடுக்கிறார்கள். ஒன்றும் எடுத்துப்போகவில்லை.

திரு. க. அன்பழகன்: Compulsory Saving Scheme மாநில சர்க்காருடைய முயற்சியினால் தொழிலாளிகளோ அல்லது அரசாங்க அலுவலாளர்களோ, குறைந்த சம்பளம் பெறுகிறவர்கள் 3 சதவிகிதம் நிதி சேர்க்க இசைந்திருப்பதை பற்றி மகிழ்ச்சி. ஆனால் அந்த 3 சதவிகிதத்தில் மத்திய சர்க்காருடைய சட்டத்தின் காரணமாக மற்றொரு 3 சதவிகிதம் அவர்கள் கட்ட வேண்டிய நிலைமை ஏற்படுகிறதே, அதில் இந்த நிதி செலுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த மத்திய சர்க்கார் நிதி செலுத்தாமல் இருப்பதற்கு அனுமதி அளிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏற்கனவே Provident fund கொடுக்கிறவர்கள் இந்த Compulsory Savings திட்டத்தின் காரணமாக அதிகம் செலுத்த வேண்டி இருப்பதால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் ஏற்படாதவாறு அதைக் கவனிக்கிறோம். நான் சொல்ல வந்தது வியாபாரிகள், மற்ற தொழில் நடத்துகிறவர்கள், விவசாயிகள் இவர்களைப் பற்றி—விவசாயிகளுக்கு எவ்வளவோ கஷ்டம் இருக்கலாம்—ஏன் செலவைக் குறைத்துக் கொண்டால், அது 5 ஆண்டு கழித்து வட்டியோடு வரும். ஒவ்வொருவருக்கும் Post-Office Savings Certificate கொடுத்து விடுவார்கள். அது வட்டியோடு

வரும். செலவைக் குறைப்பதற்குப் பயன்படுகிறது. ஓரளவுக்கு அது இப்பொழுது நம்முடைய திட்டச் செலவுகளுக்கு மூலதன மாகப் பயன்படுகிறது. அந்த வகையில் Compulsory Savings என்பதை நாம் குறை கூறக்கூடாது. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு இந்த Compulsory Savings பாதகமாக வருவதால் அதை நாம் கவனிக்கலாம்.

மேலும் முதுமைக்கால பென்ஷனைப் பற்றிச் சொன்னார்கள். பென்ஷன் எவ்வளவு தாராளமாக கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அப்படி இருந்தும் Complaint வருகிறது. தகுதி இல்லாதவர்கள் வாங்க முடிகிறது. தகுதி உள்ளவர்கள் வாங்க முடியவில்லை என்று வருகிறது. வயது நிர்ணயிப்பதற்கு கஷ்டம் இருந்தால் அது கவனிக்கப்பட்டு வரு கிறது.

அடுத்தாற் போல், கனம் அங்கத்தினர் டி. பி. ஸ்ரீனிவாசவரதன் அவர்கள் Teacher-Pupil ratio அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையில் மத்திய அரசாங்கத்துடன் கலந்து ஆலோசித்து செலவைக் குறைக்க வேண்டும். கல்வி விஸ்தரிப்பதைக் குறைக்கக் கூடாது. Teacher-Pupil ratio அதிகமாக உள்ளது. இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் குறைத்தால் நல்லது. மற்ற மாநிலத்தில் குறைத் திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் இராம நாதபுரம் பிரதிநிதி அவர்கள் கூறினார்கள். இது நல்லது தான் என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு அனுபவ சாத்தியத்தோடு சொன்னார்கள். இருக்கிற நிலையோடு சொன் னார்கள். அதோடு இப்பொழுது ஆசிரியர்களுக்கு வீடுகிடையாது. இப்பொழுது பெண் ஆசிரியர்களுக்கு பிளாக்கில் 2 வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். பள்ளிக்கூடம் கட்டும்போது ஆசிரியர்களுக்கும் வீடு சேர்த்து கட்டவேண்டும். இதற்காக திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

5-00 p.m. சமீபத்தில் CARE Administrator தமிழ் நாட்டைப் பார்த்து ரொம்ப திருப்திகரமாக இருப்பதாகச் சொன்னார்கள். ஹரிஜனங் களுக்காக 1 கோடி ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. ஹைஸ்கூ லில் எல்லாம் குழந்தைகள் படிக்கிறார்கள். அதைப் பார்த்து மிகுந்த திருப்தி பட்டார்கள். அங்கங்கே ஓரிடத்தில் குறை இருக்கலாம். நல்ல முறையில் நிறைவேற்றவேண்டும் என்று பார்க் கிறோம். பஞ்சாயத்து ஒத்துழைப்பும் இருக்கிறது. எல்லோரும் சேர்ந்து செய்கிறோம்.

இதற்கு மேலும் உங்களுடைய காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இதற்கு மேலும் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட சில விஷயங்களைப் பற்றி, நான் இங்கே குறிப்பிடவில்லை என்றாலும், அதைக் கவனிக்கமாட்டோம் என்று யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அது குறிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது. மேலும் கவனித்து என்னென்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமோ எடுத்துக் கொள்ளுகிறோம் என்று கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

9th March 1963]

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. on Monday, the 25th March 1963. ~~௭-05 p.m.~~

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

* 135. *Notification issued with G.O. Ms. No.* 298, *Food and Agricuture, dated* 29*th January* 1963, *regarding amendments to the Madras Khadi and Village Industries Board Rules*, 1960.

*136 *First Report (Third Assembly) of the Committee on Estimates of the Madras Legislative Assembly—Report on the action taken by the Government on the recommendations of the committee contained in the Report on State Transport (Nationalised).*

* 137. *Second Report (Third Assembly) of the Committee on Estimates of the Madras Legislative Assembly—Report on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Small Scale Industries.*

138. *Draft Muthuchippi Parkal Fishing Rules*, 1963.

129. 34*th Annual Administration Report* 1960–61, *of the Madras State Electricity Board.*

---

* Laid on the table of the House on 8th March 1963.

APPENDIX

(வித்வான் தி. மூத்துக்கண்ணப்பன் அவர்களது *59-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலே 419-ம் பக்கம் பார்க்கவும்.)

கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களின் ஜனத்தொகை.

மாவட்டம்.	மீனவர்களின் ஜனத்தொகை.
(1)	(2)
செங்கற்பட்டு	19,155
சென்னை	28,880
தென் ஆர்க்காடு	15,308
தஞ்சாவூர்	45,267
ராமநாதபுரம்	30,304
திருநெல்வேலி	30,531
கன்யாகுமரி	67,208
மொத்தம்	2,36,653

உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் மீனவர்களின் ஜனத்தொகை.

மாவட்டம்.	மீனவர்களின் ஜனத்தொகை.
(1)	(2)
செங்கற்பட்டு	3,612
சென்னை	2,833
தென் ஆர்க்காடு	2,188
தஞ்சாவூர்	17,184
ராமனுதபுரம்	393
திருநெல்வேலி	4,110
கன்யாகுமரி	821
வட ஆர்க்காடு	3,054
சேலம்	1,304
கோயம்புத்தூர்	1,287
திருச்சிராப்பள்ளி	2,392
மதுரை	1,103
நீலகிரி	287
மொத்தம்	40,567

கடலில் மீன் பிடிக்கும் மீனவர்கள் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் பிடிக்கும் மீனவர்கள் ஆகியோரின் மொத்த ஜனத்தொகை 277,220.

INDEX TO
MADRAS LEGISLATIVE COUNCIL DEBATES

TWENTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

28th February, 1st, 2nd, and 4th to 9th March 1963.

Volume L (Nos. 1 to 9).

PAGES

B—*cont.*

C

PAGE

C—*cont.*

PAGES.

C—*cont.*

PAGES

E—*cont.*

PAGES

J—*cont.*

PAGES

M—*cont.*

PAGES

O—*cont.*

PAGES

P—*cont.*

Q

PAGES

Q—*cont.*

PAGES

R—*cont.*

PAGES

S—*cont.*

PAGES

T—*cont.*

W


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS